www.gnanam.info
www.gnanam.lk

ஜனவரி 2024

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 284

விலை : ரூபா 100/=





யாழ் மாநகர சபை
16 JAN 2024
தாபனப் பகுதி


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்...

13

ஞா.பா.

இலங்கையிலே ராஜராஜ சோழனின் நாணயங்கள் கிடைப்பதுபோன்று பிற சேர, சோழ, பாண்டிய, உரோம, சீன எனப் பல நாடுகளைச் சேர்ந்த பல மன்னர்களின் நாணயங்களும் கிடைக்கப்பெறுகின்றன. வர்த்தகத் தொடர்புகள் மற்றும் அந்த நாட்டு அரசுகளின் இலங்கை மீதான ஆட்சி என்பன இவற்றுக்குக் காரணங்களாகின்றன. இந்த அடிப்படையிலே மதுராந்தகன் என்ற உத்தம சோழனின் நாணயங்கள் எமது கவனத்திற்கு வருகின்றன. ராஜராஜசோழனுக்கு முன்னர் ஆட்சிசெய்த இந்த உத்தமசோழன், கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் வரும் வரலாற்றுப் பாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

## (37) உத்தமசோழனின் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள்.





கி.பி. 973 தொடக்கம் கி.பி. 985 வரை உத்தமசோழன் ஆட்சிசெய்யும்போது இலங்கை சோழர்களின் ஆட்சியின்கீழே இருந்தது. நாணயங்களின் ஒரு புறத்திலே 'உத்தம சோழ' என்று நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பெற்றுள்ளதைக் காணலாம். நாகரி எழுத்துக்களிலே பொறிக்கப்பட்ட முதலாவது தமிழ்நாட்டு நாணயம் இது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நாணயத்தின் மற்றைய புறமானது தனித்துவமான அமைப்பிலே உருவாக்கப்பெற்றுள்ளது. இதிலே சோழர்களைக் குறிக்கும் புலியின் உருவமானது பீடத்திலே அமர்ந்த நிலையிலிருந்து உறுமுகிறவாறு காட்டப்பட்டுள்ளது. புலிக்கு வலப்புறத்திலே நிலைக்குத்தாகவுள்ள செண்டும் அதற்கடுத்துள்ள இரட்டை மீன்களும் பாண்டியர்களைக் குறிக்கின்றன. புலிக்கு பின்புறத்திலேயுள்ள வில்லானது சேரர்களைக் குறிக்கின்றது. இவற்றுக்கு இருமருங்குகளிலும் விளக்குகள் உள்ளன. அனைத்துக்கும் மேலே இரு சாமரைகளும் குடையும் காட்டப்பட்டுள்ளன. அதாவது உத்தமசோழ ஆட்சியிலே தமிழ் மூவேந்தர்களும் ஒரு குடையின்கீழே உள்ளடக்கப்பட்டிருந்ததை இது காட்டுகின்றது. பண்டைய காலத்திலே செழிப்படைந்திருந்த மூவேந்தர்கள் மற்றைய இலச்சினைகளையும் சேர்த்துப் பொறிக்கும் செயற்பாட்டைச் சங்க காலம் தொட்டு குறிப்புகளிலும் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. சிலப்பதிகாரத்திலே, வஞ்சிக் காண்டத்தின், காட்சிக் காதையிலே சேரன் செங்குட்டுவன் தன்னுடைய வில் இலச்சினையுடன் மற்றயை இலச்சினைகளையும் சேர்த்துப் பொறித்து வடதிசை மன்னர்களுக்கெல்லாம் ஓலையனுப்பிய பதிவினைக் காணலாம்.



"வடதிசை மருங்கின் மன்னர்கெல்லாம்
தென்தமிழ் நன்னாட்டுச் செழு வில் கயல் புலி
மண் தலை ஏற்ற வரைக" (சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்)





இங்கு காட்டப்பட்ட கட்டுரை ஆசிரியரின் சேகரிப்பிலுள்ள உத்தமசோழனின் வெள்ளி மற்றும் தங்க நாணயங்களிலே செண்டின் மேல் வளைந்த அமைப்பானது தேய்ந்துள்ளதால், 2022ஆம் ஆண்டு சடையவர்மன் சுந்தர பாண்டியனின் நினைவாக தமிழ்நாட்டிலே வெளியிடப்பட்ட பாண்டிய சின்னம் இங்கு தரப்பட்டுள்ளது. இதிலே நீள்பக்கமாகவுள்ள இருமீன்களுக்கு மத்தியிலே கேள்விக்குறிபோன்று வளைந்த அமைப்பிலே செண்டைக் கண்டுகொள்ளலாம்.

நாணயங்களிலே உத்தமசோழ என நாகரியில் எழுதப்பெற்றுள்ளன. இவை இலங்கையின் வடபகுதியிலும் அனுராதபுரப் பகுதியிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. மேல் - 1/8 கழஞ்சு - சிறிய தங்க நாணயம் - 0.49 கிராம். கீழ் - ஒரு கழஞ்சு - வெள்ளி நாணயம் - 4.27 கிராம்

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்

ஒளி: 24
சுடர்: 08
284

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka

| | |
|---|---|
| ஒரு வருடம் | :ரூ 1,000/= |
| ஆறு வருடம் | :ரூ 5,000/= |
| ஆயுள் சந்தா | :ரூ 20,000/= |

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....



⊙ **கவிதைகள்**
சீமன் கொட்டர் /
பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
(மொழிபெயர்ப்புக் கவிதை) 10
கலாபூஷணம் தம்பிலுவில் ஜெகா 14
செ.ஞானராசா 19
செ.சுதர்சன் 28
இ. ஜீவகாருண்யன் 37

⊙ **சிறுகதைகள்**
ஆசி கந்தராஜா (அறிவியல் புனைகதை) 03
ஷாவோ ஹூயோயன் /
சு.முரளிதரன் (மொழிபெயர்ப்பு சிறுகதை) 11
என்.நஜ்முல் ஹுசைன் 20
சூசை எட்வேட் (குறுங்கதை) 27
மண்டைதீவு கலைச்செல்வி 30

⊙ **கட்டுரைகள்**
ஜயதேவ உயன்கொட / க.சண்முகலிங்கம் 06
தமிழ்மணி அகளங்கன் 15
முருகபூபதி 23
ஞா.பா.

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கே. பொன்னுத்துரை 39

⊙ **வாசகர் பேசுகிறார்** 40

யாழ் மாநகர சபை
16 JAN 2024
தாபனப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## புத்தாண்டே வருக !

நமது நாடு வரலாறு காணாத நெருக்கடிகளை 2022,2023ஆம் வருடங்களில் சந்தித்தது. டொலர் நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு, எரிபொருள் விலை உயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சிறிய நடுத்தர வர்த்தக முயற்சிகள் பாதிப்பு, தொழில் இழப்பு, வட்டிவீதங்கள் அதிகரிக்கப்பட்டமை, வாழ்க்கைச் செலவு உயர்வடைந்தமை, பணவீக்கம் உயர்வடைந்தமை உள்ளிட்ட பல நெருக்கடிகள் ஏற்பட்டன.

இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணவும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 நடுப்பகுதியில் நாட்டைப் பொறுப்பேற்றார்.

பொறுப்பேற்ற கையோடு பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான வேலைத் திட்டங்களையும் அவர் முன் னெடுத்தார். இதன்காரணமாக பொருளாதார வீழ்ச்சிக்குள்ளாகியிருந்த நாடு படிப்படியாக பொருளாதார ரீதியாக மீட்சி பெற்று வருகிறது.

இந்தப் புத்தாண்டின் நிமித்தம் ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் “பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புதுவருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ள நம்நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியம். அது மலர்ப்பாதையாக இல்லாமல் முட்களும் கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கிறது. அதனால் இலங்கையை மீளக்கட்டியெழுப்பும்போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமை மேம்படவேண்டின், தமிழ்த் தேசிய பிரச்சினையிலும் ஓர் இணக்கத்தை நோக்கிய நிலைக்கு அரசாங்கம் செல்ல வேண்டும் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் என்பதையும் அவருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைமையும் பெரும்பான்மை தென்னிலங்கை மக்களிடம் தோற்றம் பெற்றுள்ளதையும் கவனிக்கமுடிகிறது.

இன்று தமிழ் மக்களுக்கு வேண்டப்படுவதெல்லாம் இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வை உள்ளடக்கிய அரசியல் அமைப்பு மாற்றமாகும்.

இந்நிலையில் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவம் கைப்பற்றிய நிலங்களை விடுவித்தல் போன்ற தளங்களில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இவையாவும் நிறைவேற்றப்பட்டு இந்த ஆண்டில் நல்ல பலன்கள் கிடைக்க வேண்டும். அமைதியான வாழ்க்கையோடிணைந்த சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டும் என்பதே நாட்டுமக்களின் இன்றைய தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் புனைகதை



# மரணத்தின் குடி

ஆசி கந்தராஜா



வாக்கெடுப்பு, பதினான்கு அக்டோபர் 2023 சனிக்கிழமை நடந்தது!

ஆஸ்திரேலிய ஆதிவாசிகளான, அபொர்ஜினி பழங்குடி மக்களின் நலன் சார்ந்து, அரசியலமைப்பை மாற்ற வேண்டுமா? என்பதற்கான கருத்துக் கணிப்பு அது. அறுபது சத வீதமான வாக்காளர்கள், வேண்டாம் என்றே வாக்களித்தார்கள். அபொர்ஜினிகளுக்குச் சொந்தமான இந்த நாட்டில், வந்தேறு குடிகளாக வாழும் வெள்ளையர்களும் மற்றவர்களும் அபொர்ஜினிகளுக்கு எதிராக வாக்களித்ததை, மாலினியும் அவர்சார்ந்த மனித உரிமை அமைப்பும் எதிர்பார்க்கவில்லை. இதற்கும்மேலாக மாலினி வாக்களிக்கச் சென்றபோது நடந்த சம்பவம் அவரது மனதைப் பெரிதும் வருத்தியது.

நடந்தது இதுதான்!

வாக்களிப்பு நிலையத்தின் முன்னால் ஆதரவு தேடி இரண்டு குழுக்கள் நின்றன. ஆம் என்பதற்கு ஆதரவு தேடி ஒன்றும், அபொர்ஜினிகளுக்கு உரிமை கொடுக்கக்கூடாது என்று இன்னொரு குழுவும் பிரச்சாரம் செய்தன. இரண்டாவது குழுவில், மஞ்சள்தோல் ஆசிய நாட்டவர்களே, பெரும்பாலானவர்கள். மாலினி எதையும் வெளிப்படையாக, நேருக்கு நேராகப் போட்டுடைக்கும் சுபாவமுள்ளவர். அன்றும் அப்படித்தான்.

வசதியான வாழ்வுதேடி ஆஸ்திரேலியா வந்த நீங்கள், இந்த நாட்டின் உண்மையான குடிமக்களுக்கு எதிராக வாக்களிகச் சொல்லி, எப்படிப் பிரச்சாரம் செய்யலாம்? என உரத்துச் சத்தம் போட்டார். நிலைமை மோசமாகாமல் தடுக்க மாலினியுடன் வந்தவர்கள் அவரை வாக்களிக்கும் இடத்துக்கு இழுத்துச் சென்றனர்.

எண்பத்துமூன்று இனக் கலவரத்தைத் தொடர்ந்து அகதிகளாக வந்த பெற்றோருடன், எட்டு வயதில் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர் மாலினி. ஆரம்பக்கல்வி முதல் பட்டப் பின்படிப்பு வரை இங்குதான். பல்கலைக் கழகத்தில் மனித உரிமை அமைப்புடன் இணைந்தவர், இன்றுவரை பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நிற்பவர், அவர்களின் நலன்களுக்காகக் குரல் கொடுப்பவர், நிறைய வாசிப்பவர்.

முனைவர் பட்டம் பெற்ற பின்னர், விரிவுரையாளராகப் பணிக்குச் சேர்ந்த கிராமப்புறக் கல்விச்சாலை ஒன்றிலே, ஆதிவாசிகளும் கல்விகற்றார்கள். வழமையான விரிவுரைகளுக்கு அப்பால் அவர்களுக்குத் தேவையான மேலதிக கல்விப் பணியை, அவர் விரும்பி ஏற்றுக்கொண்டது இயல்பாக நடந்த செயல்.

அபொர்ஜினி மக்கள், இயற்கையுடன் இணைந்து வாழ்பவர்கள். ஆஸ்திரேலிய மண்ணின் மைந்தர்கள். இவர்களுக்கு மட்டுமே கண்டம் முழுவதும் சொந்தமானது. கப்டன் குக், ஆஸ்திரேலியாவில் காலடி வைத்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரித்தானிய வெள்ளையர்களின் வருகை, இவர்களின் வாழ்க்கையை முற்றிலும் புரட்டிப் போட்டது. வெள்ளையர்கள், விலங்குகளையும் அபொர்ஜினிகளையும் பிரித்துப் பார்க்கவில்லை. அவர்கள் மீன்பிடித்த, வேட்டையாடிய இடங்களிலிருந்து துரத்தி அடித்தார்கள். குருவி சுடுவது போன்று சுட்டுக் கொன்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலம் தொட்டு, அபொர்ஜினிகள், சில தாவரங்களின் வேர்களையும், விதைகளையும், இலைகளையும் உடலில் கிளர்ச்சி ஊட்டுவ தற்காக உண்பார்கள். ஆனால் அவை போதைப் பொருள்கள் அல்ல. இந்தியர்களின் வெற்றிலை பாக்கைப் போன்றவை, என்ற பல தகவல்களை அபொர்ஜினிகளுடன் நெருங்கிப் பழகிய காலங்களில் மாலினி தெரிந்துகொண்டார்.

அபொர்ஜினிகளைப் படிப்பறிவில்லாத சோம்பேறிகளாக்க, வெள்ளையர்கள் மதுவைத் தாராளமாக அறிமுகம் செய்தார்கள். தொடர்ந்து அதை வாங்குவதற்கு, பல கொடுப்பனவு களையும் பண உதவிகளையும் வழங்கினார்கள். இளைஞர்களைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க பதின்ம வயது இளவல்களுக்கு, மதுவை மட்டுமல்ல, மேலதிக போதைக்காக பெற்றோல், பெயின்ற் தின்னர் போன்ற வேதிப் பொருள்களை நுகரவும், மெத்திலேட்டட் ஸ்பிரிட்டை அருந்தவும் பழக்கினார்கள். இதனால் உடல் ஊனமாகித் தம் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் பலர். அதில் ஒருவன் அக்காமா.

மாலினி தாவர உயிரியல் கற்பிப்பவர். அவரது ஆய்வு கூடத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்தான் பீட்டர் என்னும் ஒரு வெள்ளையன். ஆய்வுகூடத்துக்கு ஓர் இளநிலை உத்தியோகத்தர் தேவைப்பட்டபோது அதை அபொர்ஜினி இளைஞன் ஒருவனுக்கு கொடுக்க விரும்பி, அக்காமாவை நியமித்தார்.

தாவர திசுக்களிலுள்ள நுண்கிருமிகளை நீக்கிச் சுத்திகரிக்க ஆய்வுகூடத்தில் அல்கஹால் பாவிப்பார்கள். அதற்கு, எதைல் அல்கஹால் தேவை. சந்தையில் இதை வாங்குவதற்கு சுங்க இலாகாவின் விதிகளைப் பின்பற்றி, பல பத்திரங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய சிரமங்களைத் தவிர்க்கவும் நீண்டகாலப் பாவனைக்கு இருக்கட்டும் என்ற எண்ணத்திலும், பெரிய பீப்பாவில் வாங்கிய எதைல் அல்கஹாலை, மாலினி ஆய்வுகூட மேசையில் வைத்திருந்தார். விலையுயர்ந்த, கலப்படமற்ற வேதிப் பொருள் இது. நாள்கள் நகரநகர பீப்பாயிலுள்ள அல்கஹால் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, அடிமட்டத்துக்கு வந்து விட்டது. குறுகிய காலத்துக்குள் தாவர திசுக்களைச் சுத்தம் செய்ய, இந்த அளவு அல்கஹால் தேவைப் பட்டிருக்காது என்பது மாலினிக்குத் தெரியும். பீப்பாவில் வெடிப்பு ஏற்பட்டு ஒழுகவில்லை என்பதையும் மாலினி உறுதி செய்து கொண்டார். பெருமளவில் அல்கஹால் ஆவியாவதற்கான சாத்தியமும் இல்லை.

பீட்டர், தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை எனச் சாதித்தான். அக்காமா, தெரியாது எனத் தலையாட்டியதுடன் நிறுத்திக்கொண்டான். சுற்றிச்சுழன்று பலகோணங்களிலும் யோசித்த விரிவுரையாளர் மாலினியின் மூளை, "இப்படி" நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் சிந்திக் காதது ஆச்சரியம்.

இன்னுமொரு அல்கஹால் பீப்பா வாங்கு வதாயின் துறைத்தலைவரூடாக விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கனவே வாங்கிய பெருமளவு அல்கஹால் குறுகிய காலத்தில் எப்படி முடிந்த தென்ற கணக்கை, சுங்க இலாகாவுக்குச் சொல்ல வேண்டும். இதனால் பீப்பாவை அலுமாரிக்குள் பூட்டிவைத்து, தேவைப்படும் அளவு அல்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாலை, மாலினியே ஊற்றிக்கொடுக்க ஆரம்பித்தார்.

நத்தாருக்கு அடுத்தநாள்!

ஆஸ்திரேலியாவில் அன்றும் பொது விடுமுறை நாள். அருகிலுள்ள வைத்தியசாலைக்கு வருமாறு மாலினிக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. வைத்தியசாலையில் இரண்டு கண்களும் மூடிக்கட்டிய நிலையில் அக்காமா படுத்திருந்தான். அவனுக்கு இரவோடு இரவாக, கண்பார்வை போய்விட்டது.

வைத்தியர் சொன்ன தகவல்களையும் அக்காமா தெட்டம்தெட்டமாகச் சொன்ன கதை களையும் வைத்து மாலினி நடந்ததை விளங்கிக்கொண்டார்.

ஆய்வுகூடத்தில் பீப்பாவில் இருந்தது, நூறுசதவீத எதைல் அல்கஹால். பீட்டர் தனக்கு வேண்டியபோதெல்லாம், இதில் நானூற்று நாற்பது மில்லி லிட்டர் எடுத்து அதற்கு ஐநூற்று அறுபது மில்லி லிட்டர் காய்ச்சிவடிகட்டிய நீரைக் கலந்து, நாற்பத்துநாலு சதவீத அல்கஹால் ஆக்கியிருக்கிறான். இது ஒருலீட்டர் தூய ரஷ்ய வொட்காவுக்கு நிகரானது. இதை வெளியில் வாங்குவதாயின் கணிசமான அளவு பணம் கொடுக்கவேண்டும். தான் பிடி படாதிருக்க அக்காமாவுக்கும் அவ்வப்போது கொடுத்துப் பழக்கியிருக்கிறான். படிப்படியாக மதுவுக்கு அடிமையான அக்காமா, நத்தார் தினத்தன்று மாலை, மதுச்சாலைக்கு மது அருந்தப் போயிருக்கிறான். தொடர்ந்து மது அருந்தப் பணம் போதவில்லை. நேரே ஆய்வு கூடத்துக்கு வந்தவன், மது மயக்கத்தில் ஆய்வு கூடத்தில் வைக்கப்பட்டிருந்த மெதைல் அல்க்கஹாலை எடுத்து அருந்தியிருக்கிறான். ஏற்கனவே போதையிலிருந்தவனுக்கு எழுத்துக் கள் மங்கலாகத் தெரிந்திருக்க வேண்டும். அடுத்த நாள் காலையில் கண்கள் இரண்டும் குருடாகி விட்டன.

மெதைல், எதைல் இரண்டும் அல்க்கஹால் மதுக்களே! இவை இரண்டுக்கும் ஒரு காபன் அணுவும் இரண்டு ஐதரசன் அணுக்களுமே வித்தியாசம்.

நாம் அருந்தும் விஸ்க்கி, பிரண்டி, வொட்கா, சாராயம் அனைத்திலும் எதைல் அல்க்கஹால் 40 தொடக்கம் 45 சதவீதம்வரை கலந் திருக்கும். இதை அளவோடு அருந்தினால் சௌக்கியத்துக்கு எந்தக் கேடுமில்லை. ஆனால் மெதைல் அல்க்கஹால் நஞ்சு, அருந்தினால் சில மணித்தியாலங்களுக்குள் கண்களி லுள்ள நரம்புகளைப் பாதித்து, கண்களைக் குருடாக்கும்.

பத்து சதவீதமளவில், மெதைல் அல்க்கோல் கலந்த, எதைல் அல்க்கோல்தான் கடைகளில் விற்கப்படும் மெத்திலேட்டட் ஸ்பிரிட். இதை விளக்கு எரிக்கப் பாவிப்பார்கள். முன்பு பெட்ரோ மாக்ஸ் விளக்குக் கொழுத்த ஊரில் பாவித்ததும் இதைத்தான். போதைக்காகச் சிலர் மெத்தி லேட்டட் ஸ்பிரிடுடன் எலுமிச்சைச் சாறைக் கலந்து குடிப்பதுமுண்டு. எலுமிச்சை, மெதைல் அல்க்கோல் நஞ்சைச் சமப் படுத்தும் என்பது அவர்கள் வாதம். ஆனால் இது அபாய கரமானது. படிப்படியாக கண்பார்வையைக் குறைத்து குருடாக்கும்.

எதைல் அல்க்கஹால் மதுவை வடிக்கும் போது மெதைல் அல்க்கோலும், மலிவு விலை மதுவகைகளில் கலந்திருக்க வாய்ப்புண்டு. கிராமங்களில் வடிக்கும் கள்ளச் சாராயம் அல்லது காச்சுச் சாராயம் இந்தவகைகளே.

மெதைல் அல்க்கோல் - Methyl alcohol> CH3OH.

எதைல் அல்க்கோல் - Ethyl alcohol> C2H5OH

வைத்தியசாலையிலிருந்து கண்பார்வை இழந்து வெளியே வந்த அக்காமா, காட்டிலுள்ள நச்சு விதைகளைச் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டான்.

அக்காமாவின் மரணம் பீட்டரை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. களவை நிரூபிக்கமுடியாத நிலையில், அவனை வேறு ஆய்வுகூடத்துக்கு மாற்றும்படி துறைத் தலைவருக்கு சிபார்சு செய்யமட்டுமே மாலினியால் முடிந்தது.

ஒரு சமூகத்தை ஏமாத்திப் பிழைக்க வேண்டுமென்றால், அவர்களைப் போதைக்கு அடிமையாக்க வேணுமென்பார்கள். அபொர்ஜினி கள் விஷயத்தில், வெள்ளையர்கள் செய்ததும் இதைத்தான்.

வெள்ளையர்கள் பெரும்பாலும் குடியை, கொண்டாட்டத்துடன் நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் அறிமுகப்படுத்திய குடியிலிருந்து அபொர்ஜினிகளால் வெளியேற முடியவில்லை. அது வெள்ளையர்கள் பழக்கிய குடி, அபொர்ஜினிகளின் வாழ்க்கையை அழித்த குடி. மரணத்தின் குடி!

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சி முறைகள்

ஆய்வு முன்மொழிவுகளை வரையும்போது ஆய்வாளர் தாம் கையளிக்கவிருக்கும் முறைகள் (Methods) குறித்து விரிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தமது ஆய்வுக்குத் தேவையான தரவுகளையும், தகவல்களையும் எவ்வாறு திரட்டப்போகிறார் என்பதை விளக்கு வதாக இது அமையும். ஆய்வாளர்கள் முறை கள் என்பதை முறையியல் ( Methodology) என்பதில் இருந்து வேறுபடுத்தி விளங்கிக் கொள்ள முடியாதவர்களாய் இடர்ப்படுவதைக் காண முடிகிறது. ஆகையால் நாம் முறை களுக்கும் முறையியலுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைத் தெளிவாக எடுத்துக்கூறுதல் அவசியம். தரவுகளைத் திரட்டுவதிலும் அவற்றை விளக்கி உரைப்பதிலும் நாம் கையாளக்கூடிய நடைமுறைசார்ந்த விடயங்களையும் நோக்கு முறைகளையும் குறிப்பதே முறைகள் என்ற விடயம் ஆகும். ஆனால் முறையியல் என்னும் போது முறைகள் பற்றிய அறிவாராய்ச்சியியல் சட்டகம் (Epistemological Frame Work) ஆக அது பொருள் கொள்ளப்படும்.


**முறைகள்**

நாம் மேலே குறிப்பிட்டவாறு முறைகள் என்பது இருவிடயங்களைக் குறிப்பிடுகின்றது.

அ. தரவுகளைத் திரட்டுதல்

ஆ. அத்தரவுகளை விளக்குதல் Interpretation)

ஆய்வாளர் முன்வைக்கும் ஆய்வு முடிவுகளை நியாயப்படுத்துவதற்கும் வலிதாக்குவதற்கும் அவர் பயன்படுத்திய முறைகள் முக்கியமானவை. கற்றறிந்த புலமையாளர் அவையில் ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் போது ஆய்வாளர் கையாண்ட முறைகள் குறித்து ஐய வினாக்கள் எழுப்பப் படுவது வழமை. ஏனெனில், அறிவின் உற்பத்தியின் ஆதாரமாகச் சரியான முறைகள் உபயோகப்பட்டிருத்தல் அமைகிறது. ஆய்வாளர்கள் தரவுகளை திரட்டுதல், திரட்டிய தரவுகளைப் பகுப்பாய்வு செய்து விளக்குதல் என்ற இரு கட்டங்களிலும் தாம் சரியான முறைகளைக் கையாண்டுள்ளோமா என்ற உணர்வுடன் செயற்படவேண்டும். அறிவின் உற்பத்தியில் முறைகளின் முக்கியத்துவம் பற்றி விளக்கிக் கூறும் மூன்று நோக்கு முறைகள் உள்ளன.



**1. முறைபற்றிய ஒருமைக்கோட்பாடு**
(Unity of Method)

மனித அறிவின் எல்லாக் கிளைப் பிரிவுகளுக்கும் பொதுவானதாக ஒரே ஒரு முறையே உள்ளது. இயற்கை விஞ்ஞானங்களில் பிரயோகிக்கப்படும் முறையே அதுவாகும். இக்கோட்பாட்டாளர் நோக்குப்படி மனித அறிவு ஒன்றித்த விஞ்ஞானம் (Unified Science) எனக்கருதப்படும்.

**2. தனித்துவமான முறை** (Unique Method)

ஒவ்வொரு துறைக்கும் தனித்துவமான முறை ஒன்று இருக்கும். யாவற்றுக்கும் பொதுவான ஒரேயொரு முறை உள்ளது எனக்கூறுதல் தவறு என இக்கோட்பாட்டாளர் கூறுவர்.

**3. முறைகளின் பன்மைத்துவம்**
(Plurality of Method)

இயற்கை விஞ்ஞானங்கள் ஒரு வகை முறையினையும் சமூக/ மனிதப்பண்பியல் விஞ்ஞானங்கள் வேறுபட்ட முறைகளையும் வைத்துக் கொள்ளலாம் எனக்கருதும் இரண்டாம் வகையினரில் இருந்து வேறுபடும் முறைகளின் பன்மைத்துவக் கோட்பாட்டாளர்கள், பல்வேறு

**தமிழில்:**
**க. சண்முகலிங்கம்**

**ஆங்கில மூலம்:**
**ஜயதேவ உயன்கொட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளும் புத்தாக்க முறையில் கலப்புச் செய்து உபயோகிக்கப்படவேண்டும் என்பர். இக்கோட்பாட்டாளர்கள் புறவயநோக்கு அகவய நோக்கு என முறைகளைப்பிரித்து அவற்றுக் கிடையே தடைச்சுவரை எழுப்புதல் தவறானது எனக்கூறுவர்.

முறைகள் என்பதே தேவையில்லை. அவற்றை முற்றாகக் கைவிடுதலே மேலானது என வாதிடுவோரும் உள்ளனர். முறைகள் பற்றிய பிரிவினைகள் ஆய்வாளர்களின் சிந்தனை யாற்றலை தடைப்படுத்துவன என இவர்கள் கூறுவர்.

**தரவுகளைத் திரட்டல்**

சமூக விஞ்ஞான ஆய்வுகளில் பயன் படுத்தப்படும் தவுகளின் (Data) வகைகள் ஆய்வின் தன்மையைப் பொறுத்துத் தேவைப்படும் தரவுகள் வேறுபடுகின்றன. ஆய்வுக்குரிய பிரச்சினையின் தன்மை முன் வைக்கப்படும் ஆய்வு வினாக்கள் என்ப வற்றைப் பொறுத்ததாகவே எத்தகைய தரவுகள், மெய்மைகள், தகவல்கள், சான்றுகள் என்பன தேவைப்படுகின்றன என்பதை முடிவு செய்யலாம். நான்கு வகையான தரவுகள் உள்ளன. இந்நான்கு வகைகளில் எவை தமக்குத் தேவைப்படுவன என்பதை ஆய்வாளர் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

1. முதன்மைத்தரவுகள்
2. இரண்டாம் நிலைத்தரவுகள்
3. பண்புத் தரவுகள் (Qualitative data)
4. அளவைத் தரவுகள் (Quantitaive Data)

முதன்மைத்தரவுகள், முதன்மையான மூலங்களிலிருந்து பெறப்படுவன. ஆய்வாளர்கள் கள ஆய்வை நிகழ்த்தி மதிப்பீடுகளைச் செய்வார். நேர்காணல், கலந்துரையாடல்கள், குழு உரையாடல்கள், என்பவற்றையும் நடத்துவார். நேரில் விடயங்களை அவதானிப்பார். இவ்வழிகளில் பெறப்படும் முதன்மைத்தரவுகள் சமூக விஞ்ஞான ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகள். அச்சில் வெளியிடப்பட்ட நூல்கள், பத்திரிகைகள், அறிக்கைகள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவற்றில் இருந்து பெறப்படும். குறித்த விடயம் பற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் என்பன முக்கியமான இரண்டாம் நிலைத்தரவு களாகும். பண்புத் தரவுகள் என்பவை அளவிட்டுக் கூற முடியாதனவாக அமைவன. அபிப்பிராயம், நோக்கு, கருத்துகள் கதைகள் என்பனவும் ஞாபகத்திலிருந்து கூறுப்படுபவையும் இவ் வகையின. விடய ஆய்வு மூலம் பண்புத் தரவு கள் பெறப்படுகின்றன. முதன்மை மூலங்கள், இரண்டாம் நிலை மூலங்கள், என்பவற்றில் இருந்தும் பண்புத் தரவுகளைத் திரட்டிக் கொள்ளலாம். அளவைத்தரவுகள் என்பவை எண்களில் அளவிட்டுக் கூறக் கூடியனவாக இருக்கும். சனத்தொகைப் புள்ளி விபரங்கள், பொருளாதாரம், காலநிலை மாற்றம் பற்றிய தரவுகளும் அளவைத்தரவுகளுக்கு உதாரணங் களாகும். எண்களில் அளவிட்டுக் கூறக் கூடிய இத்தரவுகளை அட்டவணைகள், வரை படங்கள், என்பன மூலமும் புள்ளியியல் நுட்பமுறைகள் மூலமும் எடுத்துக்காட்டலாம். அளவைத்தரவுகளை முதன்மை மூலங்கள், இரண்டாம் நிலை மூலங்கள் என்பவற்றின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

தரவுகளின் வகைகளை நான்காகப் பிரித்துக் கூறினோம். ஆராய்ச்சி முறைகள் என்னும்போது சமூக விஞ்ஞானங்களில் இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

பண்பு முறை (Qualitative Method)

அளவை முறை (Quantitative Method)

என்பனவே இவ்விரு முறைகளாகும். இவற்றுள் அளவை முறை நேர்காட்சிவாத ஆய்வு மரபுடன் (Positivist Reash Tradition) தொடர்புடையது. அதனோடு தொடர்புடைய அனுபவவாதம் (Empiricism) என்பதும் அளவை முறையுடன் தொடர்புடையது. பண்பு முறை பின்னை நேர்கட்சிவாத மரபுகளுடன் (Post Positivist Traditions) தொடர்புடையது. நேர்காத வாட்சி மரபு, பின்னை நேர் காட்சிவாத மரபு என்ற இருஆய்வு மரபுகள் பற்றியும் முறையியல் என்னும் விடயம் பற்றிய அடுத்த இயலில் விளக்கிக் கூறவுள்ளோம்.'

**முறைகளின் தெரிவு**

ஆய்வு மாணவர்கள் தாம் தேர்ந்து கொண்ட முறைகள் பற்றி 'வினாக்கொத்து முறை' 'நேர்காணல் முறை' 'குடியிருப்பாளர் மதிப்பீட்டு முறை' 'குவிமையப் படுத்திய குழுக் கலந்துரையாடல் முறை" (Focus Group Discussion) என்ற தொடர்களால் குறிப்பிடு வதுண்டு. இது தெளிவற்றதும் எழுந்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதுமான அணுகு முறையாகும். இதனால் மாணவர்கள் எழுதும் ஆய்வு முன் மொழிவு களில் முறைகள் பற்றிய தேர்வு என்ற விடயம் குறைபாடுடையதாக இருப்பதைக் காணமுடிகிறது. ஆய்வு முறைகளைத் தெரிந்து கொள்வதற்கு இலகுவான வழிமுறை ஒன்று உள்ளது. முறைகளின் தேர்வில் பின்வரும் படிமுறைகள் உள்ளன.

- ஆய்வாளர் ஒருவர் தமக்குத் தேவைப் படும் தரவுகளின் தொகுதி நாம் மேலே குறிப்பிட்ட நான்கு வகைகளின் தொகுப் பாகவும், கலவையாகவும், இருப்பதைக் காண முடியும். அதாவது முதன்மைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள், அளவைத்தரவுகள், பண்புத்தரவுகள் என்பன வெவ்வேறு அளவுகளில் கலந் திருக்கும். ஆய்வின் தன்மையைப் பொறுத்து தரவுகளில் சிலவகைகள் கூடியும் சில குறைந்தும் காணப்படும். உதாரணமாகச் சில ஆய்வுகளில் அளவைத்தரவுகள் முக்கியமானவையாக இருக்கும்.
- ஆய்வு முன்மொழிவில் ஆய்வாளர் முன்வைத்திருக்கும் ஆய்வு வினாக்களுக்கு விடைகாண்பதற்குரிய தரவுகளே ஆய்வாளருக்குத் தேவைப்படுகின்றன. ஆகையால் இவ்வினாக்களுக்குரிய விடையைப் பெறுவதற்கான சிறந்த உபாயத்திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். இவ் உபாயத்திட்டத்தை வகுப்பதற்கு ஏற்ற வகையிலே முறை களின் தெரிவும் அமைதல்வேண்டும். ஆய்வு வினாக்களின் தன்மையைப் பொறுத்த தாகவே முறைகளின் தேர்வு அமைதல் வேண்டும்.

சிறந்த ஆய்வு முன் மொழிவுகளில் நான்கு அல்லது ஐந்து பிரதான ஆய்வு வினாக்களை ஆய்வாளர் முன்வைத்திருப்பார். இவ்வாறான பிரதான ஆய்வு வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆய்வாளர் காணப்போகும் விடையினைப் பொறுத்தே ஆய்வாளரின் ஆய்வு முடிவும் விவாதமும் அமையும். நான் எத்தகைய முறை களைத்தேர்ந்து கொள்ளவேண்டும் என்பதை ஆய்வாளர், பிரதான ஆய்வு வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் தேவைப்படும் தரவுகளின் தன்மையாது என்பதைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். சில ஆய்வு வினாக்களுக்கு இரண்டாம் நிலைத்தரவுகளே தேவைப்படும். இத்தகைய இரண்டாம் நிலைத்தரவுகளும் பண்புத்தரவுகளாகவும் இருக்கும். வேறு சில வினாக்களுக்குரிய தரவுகள் அளவைத்தரவுகள், பண்புத் தரவுகள், என்ற இரண்டினதும் கலவையாக இருக்கும்.

சில உதாரணங்களை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். கீழே சில ஆய்வு வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆய்வு வினாக் களுக்கும் பொருத்தமான முறை அல்லது முறைகளை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்

*2004 டிசம்பர் மாதச் சுனாமி அழிவின் பின்னணியில் அரச நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்கத் தவறியபோது சமுதாய அமைப்புகளால் மக்களுக்கு ஏன் விரைந்து நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு வழங்க முடிந்தது?

* முறைசார் வங்கி நிறுவனங்களால் விவசாயக்கடன் வழங்குவதில் கட்டுப்பாடுகளும் தடைகளும் இருந்த வேளைகளில் விவசாயிகள் எவ்வழிகளில் தமது கடன் தேவைகளை நிறைவு செய்தனர்?

* இலங்கையின் உள்நாட்டு யுத்தம் நடை பெற்ற காலப்பகுதியில் நிலவிய உறுதியற்ற நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நடத்தை எவ்விதமானதாக இருந்தது?

* சிவில் யுத்தங்கள் (உள்நாட்டு யுத்தங்கள்) பிறநாடுகளில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னணியை ஒப்பிட்டு ஆராயும்போது சிவில் யுத்தங்கள் எவ்வெச் சூழ்நிலைகளில் முடிவுக்கு வருகின்றன.? அவை எவ்வெவ் வடிவங்களைப் பெறுகின்றன?

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு ஆய்வு வினாக்களுக்கும் பொருத்தமான முறை ஒன்றாகவோ அல்லது பல முறைகளின் கலப்பு ஆகவோ இருக்கலாம். இவ்விரு முறைகளின் சேர்வையாகவும் இருக்கலாம். சில ஆய்வு வினாக்களுக்கான விடைகளைத்தேடி ஆவணக்காப்பகங்களிலும், நூலகங்களிலும் தேடலை நடத்த வேண்டும். களஆய்வு மூலம் மதிப்பீடுகள் (Surveys) செய்து புள்ளி விபரங்களை தொகுத்தல், வினாக் கொத்துகள் மூலமும் நேர்காணல்கள் மூலமும், குழு உரையாடல்கள் மூலமும் தரவுகளைச் சேகரித் தலும் தேவைப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவுகளை விளக்குதல்** (Interpretation)

தொகுக்கப்பட்ட தரவுகளை விளக்குதல் அல்லது அத்தரவுகளைக் கொண்டு ஆய்வு வினாக்களுக்கான விடைகளைக்காணும் செயல் முறையின் முக்கிய அம்சமாக விளக்குதல் அமைகிறது எனலாம். அண்மையில் ஒரு மாணவர் ஆராய்ச்சி முன் மொழிவு வரைவு ஒன்றை எனக்குச் சமர்ப்பித்தார். அது சிறப்பான வரைவாக இருந்தது. அவ்வரைவில் 'ஆய்வு முறைகள்' என்ற பகுதியில் தம்மால் 'பின்நவீனத்துவ முறை'(Post Modern Methord) உபயோகப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டிருந்தார். அவரது இந்த எண்ணம் எனக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருந்தது. ஆயினும் என்மனதில் ஓர் ஐயமும் எழுந்தது. ஏனெனில் அவர் சமர்ப்பித்த குறித்த ஆய்வில் பின்நவீனத்துவ முறை எனப்படும் முறை ஒன்றின் தேவை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவருடைய இந்தத் தெரிவு பொருத்தமானதா என்பதை அறிவதற்காக அவரோடு உரையாடினேன். அப்போது நான் அவரது எவ்வெவ் ஆராய்ச்சி வினாக்களுக்கு பின் நவீனத்துவ ஆய்வு முறைகள் தேவைப்படுகின்றன எனக்கேட்டேன் அவ்வுரையாடலின் பயனாக அவரது எண்ணம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது. அவர் வழமையாக பின்பற்றப்படும் சமூக விஞ்ஞான ஆய்வு முறைகளையே உபயோகிக்க விரும்பினார். ஆனால் தரவுகளை பின் நவீனத்துவக்கோட்பாடு நோக்கில் விளக்குவதற்கு விரும்புகிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

மேலே குறிப்பிட்ட அனுபவம் ஆய்வு முறைகள் பற்றிய முக்கிய விடயம் ஒன்றை எடுத்துக்காட்டுகிறது. தரவுகளை விளக்குதல் ஆகிய இவ்விடயம் ஆய்வாளர் எதிர்நோக்கும் முக்கிய அறைகூவல் ஆகும். ஆய்வாளர் தரவுகளைத் தொகுத்துக் கொண்டதுடன் ஆய்வின் முதற்கட்ட வேலை முடிவடைந்து விடும். அடுத்து தொகுத்த தரவுகளை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம் என்ற கேள்வி எழுகிறது. கருதுகோள் (Hypothesis) ஒன்றைப் பரீட்சித்துப்பார்த்தல் (Testing) என்னும் தேவைக்கு தரவுகள் உதவலாம் ஆனால், சமூக விஞ்ஞானங்களிலும் மனிதப்பண்பியல் துறைகளிலும் கருதுகோளைப் பரீட்சித்தல் (Hypothesis Testing) நோக்கமாக அமைவதில்லை என்றே கூறலாம். அவ்வாறு ஏதேனும் கருதுகோள் எதனையும் பரீட்சிக்கும் தேவை எழுந்தாலும் குறித்த கருதுகோளை ஆய்வாளர் கோட்பாட்டு நோக்கிலேயே விளக்க முன்வருவார். அவரது ஆய்வில் புள்ளி விபரங்கள் போன்ற அளவைத் தரவுகள் (Quantitative Data) முக்கியம் பெறுவதில்லை. அவரிடம் உள்ள பண்புத் தரவுகள் (Qualitative Data) கோட்பாட்டு நோக்கிலேயே விளக்க முடியும். தரவுகள் தாமாகவே எதனையும் கூறுவதில்லை. தரவுகளை நாம் விளக்கும்போதே அவை சில செய்திகளைச் சொல்கின்றன. தரவுகளை எழுந்தமானமாக விளக்குதல் முடியாது. அவ்வாறு எழுந்தமானமாக விளக்க முனையும்போது அவை வெளிப்படையாகத் தெரியாமல் ஆய்வாளர் மனதில் இருந்து வரும் அனுமானங்களின் அடிப்படையில் விளக்கப்படும். கோட்பாட்டு நோக்குப்படி விளக்கும்போது தான் அறிவு உற்பத்திக்குப் பயனுடையதாக விளக்கம் அமையும். தரவுகளின் தொகுப்பும் சான்றுகளும் கோட்பாடுகளின் நோக்கில் விளக்கப்படும்போது சமூகச் செயல்முறைகள் தொடர்பான போக்குகளும் செல்நெறிகளும் தெளிவாகின்றன. ஆகவே 'விளக்குதல்' என்பது புள்ளி விபரங்களை விளக்கிப் பொருள் கொள்வது எனக்குறுக்கிப் பார்த்தல் ஆகாது. புள்ளிவிபரப்பகுப்பாய்வு ஒரு நுட்ப செயல்முறை மட்டுமே. அந்நுட்ப முறைகள் ஊடே சமூகச் செயல் முறைகளின் போக்குகளையும் செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளையும் விளக்கலாம் என்பது உண்மையே ஆயினும் கோட்பாடு விளக்கம்தான் பிரதானமானது. கோட்பாட்டுடன் இணைந்தவிடத்துப் புள்ளிவிபரங்களும் தகவல்களும், சான்றுகளும் சமூக வாழ்வியல் பற்றிய சுவையான கதைகள் கூறுகின்றன.

சமூக விஞ்ஞானங்களில் பலகோட்பாட்டு அணுகு முறைகள் உள்ளன. இக்கோட்பாட்டு அணுகு முறைகள் தரவுகளை விளக்குவதற்கு உபயோகமான வரைசட்டத்தை வழங்குகின்றன. அமைப்பியல், சமூகவியலாளர் ஒருவர் தரவுகளை அமைப்பியல்நோக்கில் விளக்க விரும்புவார். தரவுகளை அமைப்பியல் வாதங்களின்படி அவர் விளக்குவார். பெண்ணிய ஆய்வாளர் ஒருவர் சமூகப்பகுப்பாய்வுக்கான பெண்ணிய முறையினை (Feminist Methods) உபயோகித்து பெண்ணியக் கோட்பாட்டு நோக்கில் தரவு களை விளக்குவார். பின் நவீனத்துவ சமூக வியலாளர் தரவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்நவீனத்துவ கோட்பாட்டு அனுமானங்களின்படி விளக்குவார். தோற்றப்பாட்டியல் சார்புடைய ஆய்வாளர் (Phenomenologial) Oriented Resercher) தரவுகளை விளக்குவது அமைப்பியல் வாத நோக்குடையவரில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். மார்க்சிய ஆய்வாளர் சமூகத்தரவுகளை வர்க்கங்களின் உருவாக்கம், வர்க்க அடுக்கமைவு, சமூக முரண்பாடு என்பவற்றின் அடிப்படையில் விளக்குவார். செயல்வாத ஆய்வாளர் (Functionalist Resrrcher) தரவுகளைக் கொண்டு கூறக்கூடியவை வேறுபட்டனவாக இருக்கும். அவர் சமூக ஒருங்கிணைவு (Social Cohesion) சமூக ஐக்கியம் (Solidarity) என்பவற்றை எடுத்துக் காட்டுவார்.


சமூகத்தரவுகளை விளக்கிப் பொருள் கொள்வதற்கு சமூக விஞ்ஞானங்களில் ஓரினத் தன்மையுடைய நோக்குமுறை கிடையாது. தரவுகளைக் கொண்டு பல்வேறு வகைப்பட்ட விளக்கங்களைக் கூறமுடியும். நோக்கு முறைகள் பலவானவாக உள்ளன. இதுவே சமூக விஞ்ஞானங்களின் அடிப்படையான இயல்பாகும். தரவுகளைக் கொண்டு வெவ்வேறு கோட்பாடு நோக்கு முறையினர் வெவ்வேறு கதைகளைக் கூறும்போது அக்கதைகளில் எது சரியானது என்பதைத் தீர்மானிப்பது கடினமான காரியமாகும். ஆய்வாளர் ஒருவர் செய்யக் கூடியது ஒன்றுதான்: தான் சொல்வது நம்பகமானது, அர்த்தமுடையது, நியாயப்படுத்தக்கூடிய கருத்துக்களையே தான் முன் வைத்திருக்கிறேன் என்ற உறுதியுடன் தன் ஆய்வை முன்வைக்க வேண்டும். தரவுகளைத் தொகுக்கு முன்னரே அவர் தனது நோக்கத்தைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இக்காரணத்தினாலேயே தரவுகளைத் தொகுப் பதற்கு முன்னர் ஆய்வாளர்,

1. தாம் தேர்ந்துள்ள கோட்பாட்டு வரை சட்டம் யாது?
2. தாம் எவ்வகை முறையை உபயோகித்துத் தரவுகளை விளக்க எண்ணியுள்ளார்.

என்பன பற்றித் தெளிவாகச் சிந்தித்து முடிவுசெய்தல் அவசியமானது.

**(பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்களின்** Writing Research Proposals : A Theoretical and Practical Guide **என்ற நூலின் 8ஆவது அத்தியாயத்தைத் தழுவி எழுதப்பட்டது)**

○○○



# நீ என்ன சொல்லுவாய்?

வா, சகோதரனே!
கர்த்தரிடம் செல்வோம்
அவருக்கு முன்னால்
நிற்கையில் நான் சொல்வேன்

பிதாவே, நான் எவரையும்
வெறுத்ததில்லை
ஆனாலும் நானோ
வெறுக்கப்படுகின்றேன்

நானோ எவரையும்
துன்புறுத்தியதில்லை
ஆனாலும் நானோ
துன்புறுத்தப்படுகின்றேன்

நான் எவர் நிலத்தையும்
அபகரித்ததில்லை
ஆனாலும் என் நிலம்
அபகரிக்கப்படுகிறது

நான் எந்த மக்களையும்
ஏளனம் செய்ததில்லை
ஆனாலும் என் மக்கள்
ஏளனப்படுகின்றனர்
சகோதரனே,
நீ என்ன சொல்லுவாய்?



**–சீமன் கொட்டர் (1895–1919)**

**அமெரிக்க கறுப்பினக் கவிஞர்**

**தமிழில்: பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சீன மொழி சிறுகதை



# தலை மழிப்பான் ஃபெங்

ஆங்கிலத்திலிருந்து தமிழில்


**சு. முரளிதரன்**



தலை மழிப்பான் என நாமகரணம் சூடப் பெற்ற ∴பெங் தன் வாழ்நாள் முழுவதும் தலைமயிர் சவரம் செய்வதை தவிர வேறு எதையும் செய்ததில்லை.

குறித்த ஒரு கோணத்தில் சரித்துப்பிடித்துக் கொண்டு சவரக்கத்தியின் மீது சரியான அழுத்தத்தை பிரயோகிக்கும் நுட்பம் கைவரப் பெற்றிருந்தால் தலைகளை மழிப்பது என்பது பெரிய விவகாரம் இல்லை. குறைவான அழுத்தம் இருந்தால் சுத்தமாக மழிக்க முடியாது கையின் அழுத்தம் அதிகமானால் ரணகளம் தான். மழிக்கும் போது சவர கத்தியை நிலைக்குத்தாக சில இடங்களில் பிடிக்க வேண்டும் ஆனால் மற்ற இடங்களில் சரித்துத்தான் பிடிக்க வேண்டும். சில இடங்களில் சுழற்ற வேண்டியிருக்கும். அந்தந்த இடங்களுக்கு ஏற்றவாறு சவர அலகை கையாளாவிட்டால் அழுத்தம் குறைந்தாக பதியும் போது உச்சந்தலை தோலில் சொறி ஏற்பட்ட மாதிரி இருக்கும். அழுத்தம் அதிகமாகி போனால் இரத்தக்கீறலில் குருதி வடியும்.

தொடும் உணர்வை மட்டுமே நம்பிக் கொண்டு கண்களை மூடியபடியே எளிதாகவும் சீராகவும் கைங்கரியத்தை சிறப்பாக முடிக்கும் திறமை கைவரப்பெற்றவானக தலை மழிப்பான் இருந்தான். மழிக்கும் பணியை வேகமாக செய்வதில் விருப்பற்றவனாக பொறுமையாக மெல்ல மெல்ல மழிப்பதில் நாட்டம் கொண்டவனாக இருந்தான். வாடிக்கையாளர்களுக்கும் அந்த நிதானமான வேகம் பிடித்தமானதாக இருந்தது.



**ஷாவோ ஹூயோயன்**

மெதுவாக மழிப்பது துல்லியமாக செயற்பட வழிக்கின்றது என்பது அவனது நம்பிக்கை. அவனது மழிக்கும் கத்தி உச்சந்தலையில் மெதுவாக மெதுவாக இலேசாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது வாடிக்கையாளர்கள் குறட்டை விடத்தொடங்கியிருப்பர்கள்.

தலை மழிப்பான் அந்த சிறிய நகரத்தில் ஒரு பெரிய தெருவில் ஒரு கடையை வாடகைக்கு எடுத்திருந்தான். வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகமாக இல்லாவிட்டாலும் தொழில் சீராக நடைபெற்றுக்கொண்டிருந்தது. வருபவர்களில் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்கள்தான். மேலும் பிறந்து ஒரு மாதமான குழந்தை களையும் தூக்கி வருவார்கள். மொட்டை யடிக்கப்படுவதால் தலையை சுத்தமாக பேணி வைத்திருப்பது எளிது என்பதால், சிரேஷ்ட பிரசைகள் அதனை அதிகம் விரும்பினர். குழந்தைகள் பிறந்து ஒரு மாதத்தை எட்டும் நாளில் மொட்டையடிக்க வேண்டும் என்று ஊரில் ஐதீகப்பட்ட வழக்கம் இருக்கிறது. இவைகளே தலை மழிப்பானின் ஜீவனோ பாயத்துக்கு வழி செய்வதாக இருந்தன. இப்படியாக கழிந்த வாழ்க்கை முறையில் தனது வாழ்நாட்களைக் கழிப்பதில் அவன் மிகவும் திருப்தி கொண்டிருந்தான்.

ஆனால் உலகம் வேகமாக மாறத் தொடங்கியது. ஏறக்குறைய ஒரே இரவில், சிகையலங்கார கடைகள் மற்றும் அழகு நிலையங்கள் நகரம் முழுவதும் முளைத்தன. ஹையஸ்ட் ஹேர் பார்லர், சில்க்கி டாப்ஸ், லவ் அட் ∴பர்ஸ்ட் ஸ்னிப் என அவற்றுக்கிடப்பட்ட பெயர்களைக் கேட்டாலே புதுமையானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கத் தோன்றும். இவை காரணமாக படிப்படியாக தலை மழிப்பானிடம் வரும் கூட்டத்தினரின் எண்ணிக்கை குறைந்து கொண்டு சென்றது. கசாப்புக் கடைக்காரனான ஜாங் மற்றும் ஒரு சில வாடிக்கையாளர்களைத் தவிர, வேறு யாரும் அவனிடம் வருவதாக இல்லை.

தலை மழிப்பான் தனது பழைய வாடிக்கையாளர்கள் தங்கள் தலையை தற்போது மொட்டையடிப்பதில்லை என்பதை கவனித்தான். அதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் தலைமுடியை வளர்த்து, பின்னர் நரை முடிக்கு கரும் சாயம் பூசி கொண்டார்கள். பிறந்து ஒரு மாத முடிவின் மழிப்புக்காக குழந்தைகளை அழைத்து வருவதும் இல்லை. இளம் பெற்றோர்கள் அவனது கடை சுகாதாரமாக இல்லை என்றும், தங்கள் குழந்தைகளுக்கு ஏதேனும் நோய் வந்துவிடுமோ என்று பயந்ததாகவும், அதனால் அவர்கள் மகப்பேறு மருத்துவமனைக்குச் சென்றனர், அங்கு குழந்தைகளுக்கு மழிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் இருந்தனர். கடைசியாக கசாப்புக் கடைகாரன் ஜாங் மட்டுமல்ல மற்றவர்களும் வருவதை நிறுத்தி விட்டார்கள். ஜாங் தனது தட்டையான உச்சந்தலையில் தலைமுடியை வளர்க்கத் தொடங்கினான்.

மொட்டையடிக்க தலைகள் இல்லாமல் போனதால் தலை மழிப்பான் அல்லாடினான். சவரக்கத்தியை பிடிக்க அவன் வழக்கமாகப் பயன்படுத்தும் கையானது எப்போதும் அரிப்பெடுத்துக் கொண்டிருந்தது. அபூர்வமாக எப்போதாவது வாடிக்கையாளர் யாராவது கடை வாசலில் தோன்றும் போது, தலை மழிப்பான் அவரை ஒரு கௌரவ விருந்தினரைப் போல நடத்தி தலையை மொட்டையடிக்க மணிக்கணக்காக மினக்கெட தயங்காதிருந்தான். அவனது மனைவிக்கு இந்த நிலைமையை சகிக்க முடியவில்லை. கடையை யாருக்காவது குத்தகைக்கு கொடுத்து விடும்படி கட்டளையிட்டாள். தலை மழிப்பான் அதை விரும்பாததற்கு நூறு காரணங்கள் இருந்தாலும், அவள் சொன்னபடியே நடந்து கொண்டான்.

வீட்டின் அருகே சுமார் ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் விவசாயம் செய்ய இடத்தை குத்தகைக்கு எடுத்திருந்தான். அவனது மனைவி அதைத் தனியே கவனித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது, எனவே தலை மழிப்பானுக்கு அதிகம் செய்ய வேண்டி எதுவுமிருக்கவில்லை. அவன் தனது சவரக் கருவியைக் கொண்டு விளையாடுவதில் தனது நேரத்தை கடத்தினான். ஒரு தடவை அவன் முலாம்பழம் ஒன்றை வாங்கி வந்து அதை ஒரு மனித தலை போல உருவகித்து அதை உன்னிப்பாக அவதானித்து மெதுவாகத் தன் சவரக்கத்தியால் அதன் மேற்றோலை மழித்துவிட்டிருந்தான்.



அவனுடைய மனைவி அதைப் பார்த்து விட்டு "எங்கள் மகனும் வளர்ந்து வருகின்றான். எனவே நாம் அவனுக்கு இன்னும் அதிகமாக உதவி செய்ய வேண்டும். சலிப்படைந்து போய் முட்டாள்தனமான செயல்களைச் செய்து கொண்டு தினமும் இப்படி வீட்டில் இருக்க முடியாது. வெளியே சென்று சரியான வேலை தேடிக் கொள்ள வேண்டும்." என்றாள்.

தலை மழிப்பான் தனது சவரக் கத்தியினால் முலாம்பழத்தை கூறு போட்டான்.. "எங்கள் மகன் வளர்ந்து விட்டான் என்பதை நான் அறிவேன், மேலும் அவனுக்கு உதவ நிறைய செலவுகள் ஏற்படும் என்பது தெரியும்," என்று அவன் கூறிவிட்டு "ஆனால் தலைகளை மொட்டையடிப்பதைத் தவிர, நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு என்ன தான் பிடுங்கிவிட முடியும்?" எனக் கேட்டான்.

"வேலை உங்களைத் தேடி வராது" என்று அவன் மனைவி கத்தினாள். "அதைத் தேடிப் போக வேண்டும். உதவி செய்யக்கூடிய யாரையாவது இன்னும் கண்டுபிடிக்க முடிய வில்லையா?"

சில நாட்களுக்குப் பிறகு, ஜாங்கின் கசாப்பு கடையில் ஒரு வேலை கிடைத்தது, அது வெகுவாகவே 'அவனது தொழிலுக்கு ஏற்றது' என்பதாக தெரிந்தது. ஜாங்கும் இன்னும் சிலரும் சேர்ந்து பன்றி வெட்டும் தொழிலில் ஈடுபட்டி ருந்தனர். பன்றிகளைக் கொல்ல அவர்கள் பயன்படுத்திய கத்தியால் பன்றியின் தலையை சுத்தமாக மொட்டையடிக்க முடியாது, இதன் விளைவாக தலைகளின் விற்பனை திருப்தியாக இல்லை. தலை மழிப்பானுக்கு வழங்கப்பட்ட வேலை பன்றிகளின் தலையில் உள்ள அனைத்து முடிகளையும் அவை கொல்லப்பட்ட அதே நாளில் மழித்துவிடுவதாகும்.

தலை மழிப்பான் பன்றிகளின் கொய்த தலைகளில் மனிதர்களின் தலைகளில் இயங்குவது போன்று மெதுவாக மழித்துக் கொண்டிருந்தான். இதனால் அவனக்கு ஒரே நாளில் சில பன்றித் தலைகளுக்கு மேல் மழிக்க முடியாது போனது. ஜாங் வேலை மிகவும் மெதுவாக நடப்பதாகக் கூறி, அதை வேகப்படுத்தச் சொன்னான். தலை மழிப்பானுக்க அது சாத்தியப்படவில்லை. பன்றித்தலையில் வேலை தொடங்கும் போது வேகமாக வேலை செய்வதை நினைத்தாலும் கொஞ்ச நேரத்தில் பன்றியின் தலை அவனது பார்வையில் மனிதத் தலையாக மாறிவிடும். அவன் அப்போது நிதானமாக ஒவ்வொரு செயற்பாட்டிலும் கலை நுணுக்கமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பான். ஜாங் இதைப் பார்த்து விட்டு இந்த வேலைக்கு இவன் சரிவர மாட்டான் என தீர்மானித்து அவனை வேலையை விட்டுவிட்டு போக சொல்லி விட்டான்.

தலைமழிப்பான் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டான். மீண்டும் ஒன்றும் செய்யாமல் இருப்பதால் அவ்வப்போது அவரது கை முன்பு போல் அரிப்பெடுத்துக் கொண்டிருந்தது. அவனால் அதைத் தாங்க முடியவில்லை, இவ்வளவு பெரிய ஊரில் ஒருவர் கூட தலை மொட்டையடிக்க விரும்பவில்லையா? அவனுக்கு நம்ப முடியாமலிருந்தது.

ஒரு நாள் அவர் தெருவில் நடந்து கொண்டி ருந்தபோது, ஒரு வயோதிப மனிதர் அவருக்கு முன்னால் நடந்து செல்வதைக் கண்டான். அவர் ஒரு மொட்டை போட்டுக்கொண்ட மாதிரி இருந்தார். ஒரு சில எட்டுக்களை வேகமாக வைத்து அவரின் அருகே சென்று, "மன்னிக்கவும், உங்கள் தலையை எங்கே மொட்டைய டிக்கிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டான் அந்த மனிதர் அவனை முறைத்துப்பார்த்து விட்டு அலட்சியப் படுத்தினார். அவருக்கு காது கேட்கவில்லை என்று அவன் நினைத்து உரத்த குரலில் மீண்டும் கேட்டான், "உங்கள் தலையை எங்கே மொட்டையடித்தீர்கள் என்று சொல்ல முடியுமா?"

அந்த மனிதர் அவனைப் பார்த்து, வெளிப் படையாகப் புகைந்துகொண்டு, சொன்னார். "இந்த முதியவனின் தலை மொட்டையடிக்கப் படவில்லை - நான் புற்று நோய்வாய்ப்பட்டு கீமோதெரபி செய்ததால் என் தலைமுடிகள் முழுமையாக உதிர்ந்து போய்விட்டன." இந்த பதில் தலை மழிப்பானை மிகவும் சங்கடத்தில் ஆழ்த்தியது. அவர் மொட்டையானதின் பின்னணியை மறக்க முயன்று கொண்டிருந்தான்.

அவனது மகன் இப்போது வயது வந்தவனாக இருந்தான், நிச்சயமாக ஓரிரு வருடங்களில் திருமணம் செய்துகொண்டு தன் சொந்த வீட்டை அமைத்துக் கொள்வான். எதுவாக இருந்தாலும், அந்த இளைஞனுக்கு உதவ இன்னும் கொஞ்சம் பணம் சம்பாதித்தாக வேண்டியிருந்தது.

அதிஷ்டவசமாக நகரத்தில் ஒரு எரிப் பதற்கு பயன்படுத்துவதற்காக கரித்துகளை கட்டியாக்கும் ஆலையில் வேலை கிடைத்தது. அங்கு நிலக்கரி பொடியை சல்லடை செய்யும் வேலை கிடைத்தது. அது வேறு யாரும் செய்ய விரும்பாத அழுக்கு படியும் சோர்வான தொழிலாகும். அவனது பற்கள் வெண்மையாகவே இருந்தன, ஆனால் அவரது உடலின் மற்ற எல்லா பாகங்களும் கரிதூள் படிந்து கருப்பாக மாறியது. இருப்பினும், ஊதியம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தது. இரண்டு வருடங்களாக விடியும் முன் எழுந்து தினமும் அந்த வேலைக்குச் சென்று கொண்டிருந்தான்.

ஒரு நாள் நிலக்கரிப் பொடியை அள்ளிக் கொண்டிருந்தபோது திடீரென மயங்கி சரிந்து விழுந்தான். அவனது மகன் அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான். பரிசோதனையின் அவனது நிலைமை மிகவும் மோசமாக இருந்தது அறியப்பட்டது. தாமதமான அறியப்பட்ட நுரையீரல் புற்றுநோய்க்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு மருத்துவமனையில் கீமோதெரபி ஆரம்பமானது. அவனது தலை முடி கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து வழுக்கையனாக ஆகிவிட்டான். அவன் தலையைத் தடவினான், கை சட்டென்று அரிப்பு எடுத்தது. அவனுக்கு தனது தலை மழிக்கும் கத்தியின் கீழ் மொட்டையாக்கப்பட்ட தலைகளை கண்ட பழைய நாட்களை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு அவரது உடல்நிலை மோசமடைந்தது. ஒரு நாள் அவன் கண்களை அகலமாகத் திறந்தான். "சாப்பிட ஏதாவது வேண்டுமா அப்பா?" என்று அவனுடைய மகன் அவனிடம் கேட்டான். "எனக்கு சாப்பிட எதுவும் வேண்டாம்," எனக்கூறினான். பின் "எனக்கு ஏதாவது செய்ய வேண்டும் போல இருக்கிறது." என்றான். "என்ன அது?" என்று மகன் கேட்டான்.

மழிப்பானின் கண்கள் ஒளிர்ந்ததாக "நான் ஒருவனின் தலையை மொட்டையடிக்க விரும்புகிறேன்." என்றான். இப்போது அதைச் செய்ய வேறு யாரும் அவனுக்கு அனுமதியளிக்க மாட்டார்கள் என்று அவனது மகனுக்குத் தெரியும். எனவே மகன் தனது தலையைத் தானே தட்டிக்காட்டிக்கொண்டு, "சரி, அப்பா. என்னுடையதை தலையை 'சேவ்' செய்யுங்கள்" என்றான். தலைமழிப்பான் தனது கண்களை மூடிக்கொண்டான், நீண்ட நேரத்திற்குப் பிறகு மிகுந்த முயற்சியுடன் மீண்டும் அவற்றைத் திறந்தான். "என் சவரக்கத்தியை என்னிடம் கொண்டு வா" என்றான். அவனது மகன் அவனை உட்கார வைக்க உதவினான். பின்னர் படுக்கைக்கு அருகில் மண்டியிட்டான். தலை மழிப்பான் தனது இடது கையை மகனின் தலையில் வைத்து, வலது கையில் ஏற்கனவே துருப்பிடித்திருந்த சவரக்கத்தியை எடுத்தான். அவன் முகத்தில் பல நாட்களாக காணாத புன்னகை பூத்தது.

தந்தையின் சவரக்கத்தி தலையில் படாமல் நீண்ட நேரம் காத்திருந்தான் மகன். பின் அவன் எழுந்து நின்று பார்த்த போது தன் தந்தையின் கண்கள் நிரந்தரமாக மூடியிருந்தது. ஆனால் அவனது வாயின் ஒரு முனையில் இன்னும் மறையாத முழு திருப்தி கொண்ட புன்னகையின் சுவடு இருந்தது.

OOO

# எப்படித்தாங்குவேன்....?



எண்பத்து நான்கு வருடங்கள் வாழ்ந்து
ஏழு பிறவிக்கும் ஏமாப்பைத் தழுவிய
எங்கள் ஆலமரம் அடியோடு சாய்ந்ததே.

எட்டு நவம்பர் என்வீடு நூலகமானது
எண்ணிலா மகழ்ச்சிப்பூ பூத்தது

பேராசான் யோகராசா வருகையால்
பெரும்பேறு பெற்றதைப் போலானேன்.

இரண்டு கால்களும் வீக்கம்
வறண்டு இருந்தது வதனம்

மரக்கறிகளுடன் மகள் சுவஸ்தியும்
உணவருந்திச் சென்றனர்.

வாசிப்புப் பசிக்கு அவர்தந்த விருந்து
உயிர்க்கசிவு அறுபது சிறுகதைகள்

நாவல் எழுதும்படி நயம்படக்கூறி
போய்வாறன் என்ற புன்னகை வதனம்.

நாள்தோறும் கைப்பேசியில் இடம்பெறும்
எங்கள் உரையாடல் சில வினாடிகள்.

ஆறு டிசம்பர் அறுபது கதைகளை
வாசித்து முடித்தேன் அதிகாலையில்
அதையும் கூறினேன் தொலைபேசியில்

அவர் உயிர் கசிந்து கொண்டிருந்ததை
டிசம்பர் எனக்குச் சொன்னது
எப்படித் தாங்குவேன் நான்.

**கலாபூசணம் 'தம்பிலுவில் ஜெகா'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கலைகள், விளையாட்டுக்கள், பாடல்கள்

### மருத நிலம் தந்த கலைகள்

மருத நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கு அதிக அளவில் ஓய்வு கிடைத்தது. "அன்றாடம் காய்ச்சிகள்" "அற்றைக் கூலிகள்"(அத்தக் கூலிகள்) என்ற நிலை இல்லாமல் உழைப்பைச் சேமித்து வைத்து வாழ்ந்தனர். அதனால் கலைகளை வளர்த்தனர். மொழியை வளர்த்தனர். பண்பாட்டை வளர்த்தனர். இவையெல்லாம் சேர்ந்தே நாகரிகமாயிற்று எனலாம்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையின் பெயர் "மருதை" என்றே கிராமியப் பேச்சு வழக்கில் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. மருதை என்பதே மதுரையாக மருவியிருக்கலாம். மருதை என்பது மருத நிலத்தைக் குறிக்கிறது என்பது கவனிக்கத் தக்கது.

### ஒயிலாட்டம்

மருத நிலம் தந்த கலைகளில் ஒன்று "ஒயிலாட்டம்" என்ற பெயரில் இன்றும் வழக்கிலுள்ளது. நெல்லை அவித்துக் காயப்போட்டு விட்டு(புழுங்கல்) அதைப் பறவைகளிடமிருந்து பாதுகாப்பதற்காகச் சிறுவர்கள் சிறுமியர்கள் பறவைகளைக் கலைப்பார்கள்.

நெல்லைக் கொத்தித் தின்ன வரும் பறவைகளைத் தூரத்தில் வைத்தே கலைப்பதற்கு வசதியாக இரண்டு கைகளிலும் இரண்டு சேலைத்துண்டுகளைப் பிடித்துக் கொண்டு அவற்றை அசைத்து, அசைத்து ஓடி ஓடிக் கலைப்பார்கள்.

தூரத்தில் வரும்போதே பறவைகள் காணக் கூடியதாக இருப்பதற்காக நிறத் துணிகளைக் கைகளில் கொண்டு கைகளை உயர்த்திக் கலைத்துத் துரத்துவார்கள். இந்தச் செயற்பாடே கைகளில் நிறத்துணிகளைக் கொண்டு ஆடுகின்ற ஒயிலாட்டமாக மாறியது.

மருத நிலத்துப் பெண்களின் ஆட்டமாக உருவெடுத்த இந்தக்கலை இப்போது நில வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி ஆண்களும் ஆடுகின்ற கலையாகி ஆண்களும் பெண்களும் கலந்து ஆடுகின்ற கலையாகவும் ஆகிவிட்டது.

### விளையாட்டு

மருத நிலத்திலிருந்து தோன்றியது என்று இன்றும் சான்று பகரக்கூடிய விளையாட்டு ஒன்று உண்டு. அதற்குப் பெயர் "கிளித்தட்டு மறித்தல்." "கிளித்தட்டு." "தட்டு மறித்தல்"என்ற பெயர்களில் சுருக்கமாக அழைக்கப்படும் இவ்விளையாட்டை "தாச்சி மறித்தல்" "தாச்சி" என்ற பெயர்களால் யாழ்ப்பாண மக்கள் அழைக்கின்றனர். "தாச்சி" என்ற சொல் தலைமை ஏற்பவரைக்குறிக்கும் சொல். சீட்டுப் பிடிப்பவர்கள் அந்தச் சீட்டுப்பிடிக்கும் குழுத் தலைவரைத் "தாச்சி" என்று அழைப்பதை இன்றும் காணலாம்.

வயலில் தண்ணீர்கட்டி உழுது மறுத்து பலகையடித்து நெல்விதைப்பதை "சேற்று விதைப்பு" என்று விவசாயிகள் சொல்லுவார்கள். இப்படி நெல்லை விதைத்துவிட்டு வயலில் தண்ணீர் நிற்காமல் அளைகொத்தி வெளியேற்றிவிட்டு ஐந்து ஆறு நாட்கள்வரை வயல்களைக் காவல் செய்ய வேண்டும்.

நெல் சேற்றுக்குள் அமிழ்ந்து கிடக்கும்வரை ஆபத்தில்லை. முளை நெல்லை விதைப்பதால் இரண்டாம் மூன்றாம் நாட்களில் முளை வெளியில் தெரியத் தொடங்க பறவைகள் வயலுக்குள் வந்து முளைகளைக் கொத்தித் தின்னத் தொடங்கிவிடும்.



குறிப்பாக, கிளிகள் கூட்டங் கூட்டமாக வரத்தொடங்கிவிடும். வெய்யில் வரும் வரை அவற்றைக் கலைத்துவிட்டால்

**தமிழ்மணி அகளங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தில்லை. பின் மாலையிலும் வெய்யில் குறைய கிளிகள் வரத்தொடங்கிவிடும்.

காலையிலும் மாலையிலும் ஐந்து ஆறு நாட்களுக்குக் கிளிகளைக் கலைக்க வேண்டும். வயல் வரப்புக்களில் ஓடி ஓடி கிளிகளைக் கலைப்பது ஒரு விளையாட்டாகவும் இருக்கும். ஓரிடத்தில் கிளிகளைக் கலைக்க அவை இன்னோரிடத்தில் இறங்கி மொய்த்து விடும். அதனால் வயல் நிலம் முழுவதும் சுற்றி வரவேண்டும்.

வயற் சொந்தக்காரர் அல்லது முக்கியமான வேறொருவர் நடை வரம்பு என்று சொல்லப் படுகின்ற முக்கியமான வரப்புகளில் ஓடி ஓடி கிளிகளைக் கலைத்துக் கொண்டு, மற்றவர் களைக் குறுக்கு வரப்புகளில் ஓடி ஓடி கிளிகளை வயலில் இறங்க விடாமல் மறித்துக் கலைக்கச் செய்வார்.

வயல் விளைந்து கதிர் நெல் நிலத்தில் விழுந்த பின்னும் அறுவடை வரை கிளிகளிட மிருந்து வயலைக் காப்பாற்ற வேண்டும். வயலைக் காப்பாற்றும் இந்தச் செயற்பாடே கிளித்தட்டு மறித்தல் என்ற பெயரில் ஒரு விளையாட்டாக உருவாகியது.

கிளித்தட்டு மறிக்கும் மைதானம் வயல்கள் போல இருப்பதைக் காணலாம்.

இந்த விளையாட்டு இப்பொழுது பெரு மளவுக்கு மறைந்துவிட்டது என்றே சொல்லலாம்.

## மறைந்து போன எமது விளையாட்டுகள்

நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் விளையாடிய பல விளையாட்டுக்கள் இன்று மறைந்து விட்டன. அவற்றில் வார்ப்பாய்தல்,. பாக்கடித்தல், கிட்டிப்புள்ளு. கோப்பைப்பந்து. முதலான விளையாட்டுக்கள் முக்கியமானவை.

## பாக்கடித்தல்

வீடுகளில் உள்ள கமுக(பாக்கு) மரங்க ளிலிருந்து விழும் பாக்குகளை வெட்டி வெற்றிலை சுண்ணாம்பு ஆகியவற்றோடு சேர்த்து வாயில் போட்டு மெல்லுவது இன்னும் மறையாத ஒரு வழக்கம். இதற்கு வெத்திலை போடுதல் என்று பெயர். தாம் பூலம் தரித்தல் என்றும் சொல்வார்கள்.

ஆனால் பாக்குகளை வைத்து விளையாடும் விளையாட்டு இப்போது மறைந்து விட்டது. பலருக்குத் தெரியாத விளையாட்டாக ஆகி விட்டது. இவ் விளையாட்டில் "கொம்பன் பாக்கு" என்று ஒரு பாக்கு முக்கியமானது. கொம்பன் பாக்கு என்பதைத் தலைமைப் பாக்கு எனலாம்.

"கொம்பன்" என்ற சொல் தலைவனைக் குறித்த ஒரு சொல். இன்றும் "அவன் என்ன பெரிய கொம்பனோ?"என்று கோபமாகக் கேட்பதை பலரும் அறிவீர்கள்.

விளையாட்டில் பயன்படுத்தப்படும் பாக்குகள் யாவற்றிலும் பெரிய பாக்காக அடிப்பக்கம் சப்பையாக அமைந்த பாக்கை கொம்பன் பாக்காக எடுத்துக்கொண்டு விளையாட்டு தொடங்கப்படும்.

இந்த விளையாட்டுக்கு, தட்டையானதாக வழுக்கக்கூடியதாக இருக்கும் ஓரளவு பாரமான கல் பயன்படுத்தப்படும். எங்கள் ஊரில் (பம்பைமடு) ஒரு இறாத்தல் படியையே பயன் படுத்தினோம். அதுதான் சிறந்த உபகரணம்.

கொம்பன் பாக்கை படியினால் அடித்தால் அது இலேசில் பிரளாது(கவிழாது). அது சென்று அடிப்பக்கம் கீழாக இருந்துவிடும். அது அப்படி இருப்பதைக் குந்திக்கொண்டு இருப்பதாகச் சொல்வார்கள். அதனால் அந்தப் பாக்குக்கு "குந்தன் பாக்கு" என்றும் பெயர்.

தேவைக்களவாக ஒரு கோடு கீறப்படும். அதை விட்டமாகக் கொண்டு அதைச் சுற்றி நீள் வட்டவடிவம் வரையப்படும்.

அக்கோட்டிலிருந்து பத்து முழம் வரையில் (பதினைந்து அடி) ஒரு கோடு கீறி அக் கோட்டுக்கு வெளியே நின்று ஒவ்வொருவராக ஒவ்வொரு பாக்கை அந்தக் கோட்டை நோக்கி வீச வேண்டும். கோட்டில் அல்லது கோட்டுக்கு மிகக் கிட்டச் சென்று நிற்கும் பாக்குகளின் அடிப்படையில் ஒன்று, இரண்டு என பங்குபற்றும் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

கோட்டின் நடுவில் கொம்பன் பாக்கு வைக்கப்படும். பாக்குகளை வீசியவர்களின் வரிசையை நினைவில் வைத்துக்கொண்டு அவர்கள் வீசிய பாக்குகள் யாவற்றையும் கொம்பன் பாக்குக்கு இரண்டு பக்கமும் பாக்குக்குப் பாக்கு ஒருபடி இடைவெளி அல்லது அடிக்கும் கல் இடைவெளி இருக்கும்படி கோட்டில் பாக்கின் அடிப்பக்கம் இருக்கும் படியாக குந்தவைக்கவேண்டும்.

படியை வழுக்கும்படி வீசி கொம்பன் பாக்கில் மட்டும் படும்படி அடிக்கவேண்டும், வேறு பாக்கில் பட்டால் தண்டனையாக ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கு வைக்கவேண்டும். கொம்பன் பாக்கில் மட்டும் பட்டு அது கோட்டுக்கு வெளியே நீள் வட்டத்துக்கு உள் அப்படியே இருந்தாலும் பிரண்டு கவிழ்ந்து கிடந்தாலும் தண்டனைப்பாக்கு வைக்கவேண்டும். கொம்பன் பாக்கில் மட்டும் பட்டு நீள் வட்டத்திற்கு வெளியே சென்று குந்தியிருந்தாலும் தண்டனைப் பாக்கு வைக்க வேண்டும்.

வேறு பாக்குகளில் படாமல் தனியாக கொம்பன் பாக்கில் மட்டும் பட்டு அப்பாக்கு நீள் வட்டத்திற்கு வெளியே சென்று குந்தாமல் பிரண்டு மல்லாக்காகக் கிடந்தால் அடுத்த போட்டியாளர் மல்லாக்காகக் கிடக்கும் பாக்கிற்கு மட்டும் அடிக்கவேண்டும். ஒவ்வொரு வருக்கும் வரிசைப்படி முதல் சுற்றில் அடிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தொடர்ந்து அடிக்கும்போது பாக்கு மல்லாக் காகவும் கிடக்கலாம், குந்தியும் கிடக்கலாம். வரிசைப்படி ஒவ்வொருவரும் அடித்து வேறெ வராலும் அடிக்கப்படாதபடி அடித்தவர், வெற்றி யாளராகக் கருதப்படுவார். அவருக்கு அந்த வரிசையில் வைக்கப் பட்டிருந்த பாக்குகள் அனைத்தும் சொந்தமாகும்.

இந்த விளையாட்டு இப்போது வவுனியா மாவட்டத்திலோ வேறு எங்கோ விளையாடப் படுவதாகத் தெரியவில்லை.

## கோப்பைப் பந்து

கோப்பைப்பந்து விளையாட்டை பிள்ளையார் பந்து விளையாட்டு என்று சில இடங்களில் அழைக்கிறார்கள். போட்டியாளர்கள் இரு கன்னைகளாக (அணிகளாக) பிரிக்கப்படுவர். எத்தனைபேர் என்ற கணக்கில்லாமல் சமமான எண்ணிக்கைகொண்ட வீரர்கள் இரண்டு அணிகளிலும் விளையாடுவார்கள்.

ஒரு பழைய தகரக்கோப்பையை பின் புறத்தில் ஒரு சிறு தடியை முண்டு கொடுத்து நிறுத்துவார்கள். அந்த இடத்திலிருந்து இருபது முழத் தூரம் வரையில் ஒரு கோடு போடப்பட்டு அதற்கு வெளியே ஒரு அணியினர் நிற்பார்கள். அவர்கள் பந்தை வீசிக் கோப்பையைச் சாய்க்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் மும் மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

முற்காலத்தில் துணியைச் சுருட்டிச் சுற்றி பந்தாக்கி விளையாடினார்கள். எமது காலத்தில் டென்னிஸ் பந்து பயன்படுத்தப் பட்டது.

கோப்பைக்கு இரு பக்கங்களிலும் நேராகப் பின்னாலும் மற்றைய அணியினர் நிற்பார்கள். வீசப்பட்ட பந்து கோப்பையில் படாது எதிர் அணி வீரரின் கையில் பிடிபட்டால் அவரது வாய்ப்பு முடிந்து விடும். கோப்பையில் பட்டு கோப்பை சரிந்துவிட்டால் அந்த அணியினர் ஒன்றாகச் சேர்ந்து கோப்பை இருந்த இடத்தில் கூடுவார்கள்.

அந்த அணியிலுள்ள யாராவது ஒருவரிடம் அணித்தலைவரால் பந்து கொடுக்கப்படும், யாரிடம் பந்து கொடுக்கப்பட்டது என்பது மாற்று அணியினருக்குத் தெரியாதிருக்கும். பந்து வைத்திருப்பவரும் ஏனையோரும் தங்களிடம் பந்து இருப்பதைத் தெரியப்படுத்தாமல் கவன மாகப் பந்தை மறைத்து வைத்திருப்பார்கள்.

எதிர் அணியினரில் எவராவது பந்து வைத்திருக்கும் அணியிலுள்ள எவரையோ அல்லது கோப்பையையோ தொட்டுவிட்டால் அந்த அணி வெற்றி பெற்றுவிடும். மாறாக பந்து வைத்திருப்பவர் எதிர் அணியியிலுள்ள எவரையாவது பந்தால் அடித்துவிட்டால் அவ்வணி வெற்றி பெற்றுவிடும். வெற்றி பெற்ற அணி பந்துவீச வரும்.

விளையாட்டின் ஆரம்பத்தில் எந்த அணி பந்து வீசுவது என்பதை இரண்டு அணியினரும் சேர்ந்து தீர்மானிப்பர். இந்த விளையாட்டு இப்போது விளையாடப்படுவதைக் காண முடியவில்லை. இப்படி பல விளையாட்டுக்கள் அழிந்து விட்டன.

## விளையாட்டுப் பாடல்--

சிறுவர்கள் ஒன்றாகக் கூடியிருந்து விளையாடும் பல விளையாட்டுக்கள் இன்று வழக்கிழந்து விட்டன. அவற்றில் ஒன்றுதான் இங்கே குறிப்பிடப்படும் விளையாட்டு.

எல்லோரும் சுற்றி வளைத்து இருப்பார்கள். அவர்களிலே தலையாரி(தலைமை தாங்குபவர்) அங்குள்ளவர்களுக்கு ஒரு போட்டியை வைப்பார். எல்லோரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப் பார்கள்.

தலையாரி சொல்லுவார்:

**சுட்ட பிலாக்கொட்டை வெடிக்க வெடிக்க**
**சூரியன் வாயும் பொத்தப் பொத்த**
**தாய் பறைஞ்சாலும் தன் குஞ்சு பறையக்கூடாது.**

பறைதல் என்பது இன்று கதைத்தல் என்று சொல்லப்படும் கருத்துக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாகும். மலையாள மொழியில் இன்றும் வழக்கிலுள்ள இச் சொல் எம்மத்தியில் வழக்கிழந்து வருகின்றது. தாய் என்பது தலையாரியைக் குறிக்கிறது. குஞ்சு என்பது போட்டியாளர்களைக் குறிக்கிறது.

இதன் பொருள் தான் கதைத்தாலும் போட்டியாளர் எவரும் கதைக்கக் கூடாது என்பதாகும். எல்லோரும் வாய் பொத்தி இருப்பார்கள். சிறுவர்களால் நீண்ட நேரம் வாய்பொத்திக் கதைக்காமல் இருக்கமுடியாது. தலையாரி போட்டியாளர்களை எப்படியாவது கதைக்க வைத்து விடுவார்.

போட்டியின் சிறப்புப் பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால் தலையாரி சொல்லும் கவிதை என் கவி உள்ளத்தை மிகவும் தொட்டுவிட்டதால் அதைப்பற்றியே சொல்ல விரும்புகிறேன்.

பலாக்கொட்டையைச் சுட்டால் அது ஓயாமல் வெடித்துக்கொண்டே இருக்கும். சிறுவர்கள் சுடுபட்டுக்கொண்டிருக்கின்ற பலாக் கொட்டை போன்றவர்கள். இதுவே சுட்ட பிலாக் கொட்டை வெடிக்க வெடிக்க என்ற உவமையால் குறிக்கப் படுகின்றது.

சூரியனின் வாயை யாரும் பொத்தி மூட முடியாது. சூரியனுக்கு உதிக்கவேண்டாம் என்று ஆணையிட்டு நிறுத்தியவள் நளாயினி என்று புராணங்கள் சொல்கின்றன. சூரியனைப்பார்த்து "என்கணவன் கள்வனோ" என்று கேள்வி கேட்டு பதில் பெற்றவள் கண்ணகி. அதேபோல் சூரியனுக்கு ஆணையிட்டு "சூரியன் வாயும் பொத்தப் பொத்த" என்று சொல்லுகின்ற தலையாரியின் தைரியம் வியக்கத்தக்கது.

வழமையாக சந்திரனைத்தான் சிறுவர்கள் விளையாட அழைப்பார்கள். சூரியனை யாரும் விளையாட அழைப்பதில்லை. சூரியனையும் தமது விளையாட்டுக்குள் கொண்டுவந்து சூரியனும் கதைக்கக் கூடாது என்று ஆணை இடும் தலைமைப் பண்பு, ஆளுமை அற்புதம்.

தலையாரியாகிய தன்னைத் தாயாகவும் சிறுவர்களைச் சேய்களாகவும் சொல்லுகின்ற பாங்கும் அற்புதம்.

## கேள்வி பதில் விளையாட்டுப் பாடல்

மழை காலத்தில் வீட்டுக்குள்ளே இருந்து சிறுவர்கள் விளையாடுகின்ற பல விளையாட்டுக்கள் கிராமங்களிலே இருந்தன. அவற்றிலே கேள்வி பதில் வடிவிலமைந்த ஒரு விளையாட்டும் அதற்கான பாடலும் கீழே தரப்படுகிறது.

ஒரு சம்பந்தமும் இல்லாமல் என்ன? என்று கேட்டால் "அன்னம்" என்று பதில் சொல்வது கிராமத்துச் சிறுவர்கள் வழக்கம். இதையே முதற் சொல்லாகக்கொண்ட ஒரு விளையாட்டுப் பாடல் இது.

**என்ன?**
**அன்னம்.**
**என்னன்னம்?**
**சோத்தன்னம்.**
**என்ன சோறு?**
**பழஞ்சோறு.**
**என்ன பழம்?**
**வாழைப் பழம்.**
**என்ன வாழை?**
**திரி வாழை.**
**என்ன திரி?**
**விளக்குத் திரி**
**என்ன விளக்கு?**
**குத்து விளக்கு.**
**என்ன குத்து?**
**இந்தக் குத்து.**

என்ன விளக்கு? என்று கேட்டதும் பதில் சொல்பவர் தனது இரண்டு கைகளையும் பொத்திப்பிடித்து கேள்வி கேட்டவரின் முதுகில் குத்துவார். மெதுவாகத்தான் குத்துவார். ஏனெனில் அடுத்த தடவை மற்றவர் தனக்குக் குத்த வேண்டி வரும் என்பது அவருக்குத் தெரியும்.

ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கமாக பதில் அமையும். உதாரணமாக என்ன அன்னம்? என்ற கேள்விக்கு "சோத்தன்னம்" என்று சொல்லுகின்ற பதில் அன்னத்தின் இன்னொரு சொல் சோறு என்பதாக அமைந்திருப்பதைக் காணலாம். இதையே சோத்து அன்னம், என்கிறார். சோறாகிய அன்னம் சோற்று அன்னம். இது பேச்சு வழக்கில் சோ த்தன்னமாயிற்று.

திரி வாழை என்று ஒரு பதில் சொல்லப் பட்டுள்ளது. திரி வாழை என்ற பெயரில் ஒரு வாழை இனம் இருந்திருக்கவேண்டும். இப்போது இருக்கிறதா அல்லது வேறொரு வாழை இனத்துக்கு அந்தப் பெயர் இருந்ததா என்பது தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தொடர் சிந்தனைப் பாட்டு

ஒன்றோடு ஒன்றை ஒப்பிட எப்போது பிள்ளை முயலுகிறதோ அப்போதுதான் பிள்ளைக்கு அறிவு வளர்கிறது என்கிறார்கள் கல்வியியலாளர்கள். ஒன்றோடு மற்றொன்றைத் தொடர்புபடுத்தினால்தான் ஒப்புவமை ஏற்படுகிறது.

இங்கே நான் தரும் பாடல் நாங்கள் சிறுவர்களாக இருந்தகாலத்தில் எங்களுக்குச் சொல்லித் தரப்பட்ட பாடல். சிறுவர்களுக்கு எப்படி தொடர் சிந்தனையை அபிநயப் பாடல் மூலம் உருவாக்கினார்கள் என்பதைப் பார்த்து வியந்துபோய் நிற்கிறேன். பாடலை பார்ப்போம்.

**அக்கா வீட்ட போனேன்**
**அக்கா பழஞ்சோறு தந்தா**
**வேண்டா மிண்டு வந்தேன்**
**வழி நெடுகப் பாம்பு.**
**பாம்படிக்கத் தடிக்குப் போனேன்**
**தடி யெல்லாம் தேன்**
**தேன் எடுக்கச் சட்டிக்குப் போனேன்**
**சட்டி யெல்லாம் ஊத்தை**
**ஊத்தை கழுவத் தண்ணிக்குப் போனேன்**
**தண்ணி யெல்லாம் மீன்**
**மீன் பிடிக்க வலைக்குப் போனேன்**
**வலை யெல்லாம் பீத்தல்.**
**பீத்தல் தைக்க ஊசிக்குப் போனேன்**
**ஊசி யெல்லாம் வெள்ளி**
**வெள்ளி யடி வெள்ளி**
**பொயிலக் காம்ப நுள்ளி**
**வாயில போடடி வள்ளி**

பேச்சுவழக்குச் சொற்களை மாற்றாமல் அப்படியே தந்துள்ளேன். இச் சொற்கள் இப்போதும் வழக்கிலுள்ளதால் விளங்கிக் கொள்வதில் சிரமமிருக்காது என நினைக் கின்றேன்.

இப்பாடலில் பாம்பு, தடி,தேன், சட்டி, தண்ணி, மீன், வலை, ஊசி, எனத் தொடர்பு படுத்தி அவற்றின் பொருத்தப் பாட்டைச் சொல்லும் அழகே அழகு.

எதுகை மோனையோடு அமைந்து இறுதியில் வெள்ளி, நுள்ளி, வள்ளி, என ஈற்றசை இயைபோடு முடித்திருப்பது எவ்வளவு அழகான கவிதையாக இருக்கிறது.

இப்படி இன்னும் பல இருக்கின்றன. எழுதில் இன்னும் தொடரும்.

○○○

## ஆன்மாவின் அழுகை!! - செ.ஞானராசா

கண்ணயர்ந்த சில நொடிகளில்
விசும்பல் சத்தம் கேட்கிறது
விலைவாசியை எண்ணிச்
சில வேளை
விசும்புகிறாளோ என்று
மெல்ல அருகில் படுத்திருக்கும்
மனையாளைப் பார்க்கிறேன்.....

பகல் முழுதும் அரிசிக்கு
அழுதலைந்த களைப்பில்
அசுமாத்து ஏதுமின்றிக் கிடக்கிறாள்
அழுது பயனில்லை என்று
அவள் ஏழாம்அறிவு
ஏதும் சொல்லியதோ தெரியாது...


விசும்பல் மெல்ல மெல்ல
விம்மலாக வெடிக்கிறது
இன்னும் சிறிது நேரத்தில்
அது பெரும் ஓலமாக
எழவும் கூடும்....

சுற்றிப் பார்க்கிறேன்
இறப்பில் தொங்கியபடி
என் ஆன்மா தான்
விசும்புகிறது நடந்ததை நடப்பதை
நடக்கப்போவதை எண்ணி
அதற்கேதும்
கலக்கம் வந்திருக்கக் கூடும்...
ஆன்மாக்கள் இப்போ
அரற்றத் தொடங்கிவிட்டன
என்ற ஆறுதலில்
கண்ணயர்கிறேன்
நாளைய பொழுது
சில வேளை
நமக்கானதாக அமையக்கூடும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# இந்த வீடு வேண்டும்

என். நஜ்முல் ஹுசைன்



ஓதிக் கொண்டிருந்த குர்ஆனை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி விட்டு தலையைத் தூக்கிப் பார்த்தார் சமத் சேர். இன்னும் கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும் கதவைத் தட்டுபவர் மிகவும் மெதுவாகத்தான் தட்டிக் கொண்டிருந்தார். அதனால்தான் அந்தச் சத்தம் உள் அறைக் குள்ளும், சமையலறைக்குள்ளும் இருந்த அவரின் மனைவி மகள்கள் யாருக்கும் கேட்கவில்லை.

சமத் சேர் குர்ஆனை வைத்து விட்டு மெதுவாகச் சென்று கதவைத் திறந்தார்.

அங்கே சுந்தரம் ஐயா நின்று கொண்டி ருந்தார்.

"சுந்தரம் ஐயாவுடன் இருந்த அனைத்து கணக்கு வழக்குகளையும், கொடுக்க வேண்டிய கோப்புகளையும் பரிபூரணப்படுத்தி கொடுத்து விட்டேனே. மறுபடியும் ஏன் வந்திருக்கிறார் ?"

சிந்தனையோட்டம் சென்று கொண்டிருக்கும் போதே, "வாங்க ஐயா, வாங்க. சுகமா இருக்கிறீங்களா ?"

"ஓம் ஓம் ஐயா சுகமா இருக்கிறானான். ஒரு முக்கிய விஷயமா உங்கள பாக்க வந்தன்" என்றார்.

சமத் சேர் தனது மனைவியுடனும் நான்கு பெண் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த வீட்டை வாங்கியவர், இந்த சுந்தரம் ஐயாதான்.

சமத் சேர் ஒரு ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர். மினுவன்கொட பாடசாலை ஒன்றின் அதிபராக இருந்தவர்.

கொழும்பு புதுக்கடையில் சொந்த வீட்டில் வசித்து வந்தார். நான்கு பெண் பிள்ளைகள் இருந்தாலும் இன்னும் ஒரு மகளுக்குக் கூட திருமணம் நடக்கவில்லை. மூத்த மகளுக்கு மட்டுமே திருமணப் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருந்தார். ஆசிரியர் தொழில் மூலம் கிடைக்கும் பென்ஷன் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடச் செய்தது. மின்சார கட்டண பில்லை பார்க்கும் போதெல்லாம் சமத் சேர் எங்கே தனக்கு ஹார்ட் எட்டேக் வந்து விடுமோ என்று அச்சப்படாத வேளை இல்லை. போதாதற்கு தண்ணீர் பில்லும் தனது பங்குக்குச் சேர்ந்து கொண்டது.

மூத்த மகளுக்கு மிகவும் எளிமையாக திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டு மென்றால் கூட சில லட்சங்கள் தேவை. சமத் சேர் யாரிடமும் சென்று கை நீட்டிப் பழக்கமில்லாதவர். வயதும் ஏறிக் கொண்டிருந்த மூத்த மகளின் திருமணத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்று சமத் சேரும் மனைவியும் மிகவும் உறுதியாக இருந்தனர்.

அதற்காக புதுக்கடையில் தாங்கள் வசித்து வந்த வீட்டை விற்கத் தீர்மானித்தனர். பல பேர் வீட்டைப் பார்த்து விட்டுப் போனாலும் எல்லோருமே மிகவும் குறைந்த விலைக்குத்தான் வீட்டைக் கேட்டனர்.

சமத் சேருக்கோ வீடு விற்கும் பணத்தில்தான் மூத்த மகளின் திருமணத்தை முடிக்க வேண்டும், தாங்கள் வசிப்பதற்கு ஒரு சிறிய வீட்டை வாங்கவும் வேண்டும் என்ற நிலை. அத்தோடு மற்றைய மூன்று மகள்களுக்கும் எதையாவது சேமித்து வைக்கவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் சரியான விலை கிடைக்கும் வரை காத்திருந்தார். சுந்தரம் ஐயாதான் சமத் சேர் எதிர்பார்த்த பணத்தைத் தர சம்மதித்தார். முதலில் சுந்தரம் ஐயாவும் சமத் சேரிடம் பேரம் பேசினாலும் கூட சமத் சேர் தனது பெண் மக்களைப் பற்றி கூறியவுடன் மறு பேச்சு பேசாமல் வீட்டை சமத் சேர் சொன்ன விலைக்கே வாங்கிக் கொள்ளச் சம்மதித்தார். இதுவே சுந்தரம் ஐயாவின் மனிதாபிமானத்தைக் காட்டி நின்றது.

சுந்தரம் ஐயா யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவர் கொழும்புக்கு அடிக்கடி வந்து வியாபார பொருட்களை வாங்கிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். கொழும்புக்கு வரும்போது தங்குவதற்கும் வாங்குகின்ற சில பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் அவருக்கு ஒரு இடம் தேவைப்பட்டது. தரகர் மூலம் வந்த சமத் சேரின் வீடு அவருக்கு பிடித்திருந்தது. எழுபது லட்சத்துக்கு அந்த வீட்டை அவர் வாங்கிக் கொண்டார்.

வீடு சம்பந்தப்பட்ட அனைத்து சட்டப் பூர்வமான வேலைகளையும் ஒரு சட்டத்தரணி மூலம் பூர்த்தி செய்து கொடுத்து சமத் சேர் பணத்தை வாங்கிக் கொண்டார்.

இது நடந்து இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. புதியதொரு சின்ன வீட்டினை வாங்கி அங்கேதான் சமத் சேர் குடும்பம் குடியிருக்கின்றது. மூத்த மகளின் திருமண ஏற்பாடுகளும் மெது மெதுவாக நடந்து கொண்டிருக்கிறது.

“இப்போது சுந்தரம் ஐயா எதற்கு தேடிக் கொண்டு வந்திருக்கிறார் ?” சிந்தனையோடு சமத் சேர் சுந்தரம் ஐயாவை அமரச் சொன்னார்.

பரஸ்பரம் இருவரும் சுக நலன்களை விசாரித்துக் கொண்டனர்.

“ஐயா சொல்லுங்க. என்ன விஷயமா தேடி வந்திருக்கீங்க ?”

“சேர், எல்லாம் நல்ல விஷயமாத்தான் வந்தனான். உங்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்க வந்திருக்கன்” என்று கூறி தான் கொண்டு வந்திருந்த கைப் பையைத் திறந்தார். அதிலிருந்து ஒரு காசோலையை எடுத்து சமத் சேரிடம் நீட்டினார்.

அதில் 3 ம் சில பூஜ்ஜியங்களும் எழுதப் பட்டிருந்தன. அது முப்பதினாயிரமா அல்லது மூன்று லட்சமா ? என்று சமத் சேருக்கு யூகிக்க முடியாதிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுந்தரம் ஐயா, வீட்டுக்குத்தான் நீங்க முழுசா பணத்த தந்திட்டீங்களே ? எதுக்கு இந்தப் பணம் ?"

"சேர், நீங்க சொன்ன பணத்த தந்து நா வீட்ட வாங்கிட்டன்தான். ஆனா இது அதுக்குப் பிறகு உங்களுக்கு கிடைச்ச பணம். உங்களின்ர பணம்"

சமத் சேர் குழப்பத்தில் இருந்தார். கையை நீட்டி காசோலையை வாங்கவில்லை. சுந்தரம் ஐயா ஏதோ பகிடி பண்ணுகிறார் என்று சமத் சேர் நினைத்தார்.

"இல்ல இல்ல சேர் இது உங்களின்ர பணம்தான். மூண்டு கோடி 'ரூபா."

சமத் சேருக்குத் தலை சுற்றியது.

"என்ன மூணு கோடியா....?"

இப்போதுதான் சமத் சேருக்கு சந்தேகம் வலுப்பெற ஆரம்பித்தது.

சுந்தரம் ஐயா ஏதோ ஏமாற்றப் பார்க்கிறார். இந்த முகநூலில எல்லாம் உங்களுக்கு கோடி கிடைத்திருக்கிறது என்று சொல்லி வங்கி விபரங்களையெல்லாம் எடுத்து அதிலுள்ள பணத்தையெல்லாம் சுருட்டுகிற கூட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். அப்படித்தான் இதுவுமோ என்று நினைப்பதை சமத் சேரினால் தவிர்க்க முடியாமலிருந்தது.

அவரது சிந்தனையை கலைத்து சுந்தரம் ஐயா பேசினார்.

"நான் உங்களிட்டை வீட்டை வாங்கி பத்து நாளைக்குள்ள ஒரு பெரீய மனிசன் வசதியானவர் அழகான காரிலை வந்து வாசலிலை இறங்கினார்.

இந்த வீட்டை எனக்குத் தாருங்கோ எண்டு கரச்சல் படுத்தினார். நானோ இது என்ரை தொழிலுக்காய் வாங்கின வீடு. இதை விக்கிற எண்ணமில்லை என்று ஒரேயடியாய்ச் சொல்லிப் போட்டன்.

அதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமே ? இந்த இடத்திற்கு எவ்வளவு விலையெண்டாலும் நான் தரத் தயாராய் இருக்கிறன்.இந்த இடம் எனக்கு வேணும் எண்டார். அவர் ஒரு போரா பாய் கண்டியளோ! அவர் என் வீட்டு வலப்பக்கமும் இடப்பக்கமும்உள்ள வீடுகளையும் வாங்கிப்போட்டாராம். நடுவிலை உள்ள எங்கடை வீட்டையும் வாங்கினால்தான் தன்ரை வேலையள் செய்யச் சுகமாம். பெரீய கொம்பாட்மண்ட் கட்டப் போறவராம். அவர் கடைசியாக என்ன சொன்னவர் தெரியுமே? மூண்டுகோடி தருவதாகச் சொன்னார்.

அவர் மூண்டு கோடி எண்டோணை உங்கடை மூண்டு பொம்புளைப் புள்ளையளும் என்ரை கண்ணுக்கு முன்னுக்கு நிண்டினம்.

அந்தப் பத்து நாளும் அங்கை நீங்கள் இருந்திருந்தால் அந்த "பாய்"உங்களிட்டை வீட்டை விலைக்கு வாங்கியிருப்பார்.

நான் அவற்றை விருப்பத்திற்கு மறுப்புச் சொல்லேல்லை. நேற்றுத்தான் எல்லா வேலையும் முடிஞ்சுது. இந்தாருங்கோ உங்கடை மூண்டுகோடி 'ரூபா. எனக்கு எழுபது லச்சத்தை தாருங்கோ" என்று கூறி சமத் சேரின் கைகளில் காசோலையை சுந்தரம் ஐயா திணித்தார்.

இந்தக் காலத்திலும் இப்படி ஒரு மனிதரா?


"உயர் குணம் கொண்ட மனிதர்களைத் தீர்மானிப்பது காலமல்ல" சமத் சேரின் உள்ளம் சொன்னது. அவர் சுந்தரம் ஐயாவின் கரங்களைப் பற்றி முத்தமிட்டுக் கொண்டிருந்தார் - கண்ணீர் அந்தக் கரங்களில் ஓவியம் வரைந்து கொண்டிருந்தது.

ooo




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகளும் சித்திரங்களே



### கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதை தொடர்பான நயப்புரை



முருகபூபதி

என்
பாதங்களுக்குக் கீழே
பூக்கள் இல்லை
மொய்த்துக் கிடந்தவை
முட்களே.
எனினும்
ரத்தம் துடைத்து
நடந்து வந்தேன்.

என்னைத்
தடவிச் சென்றது
தெற்கே குளித்து வந்த
தென்றல் அல்ல
நுரையீரல்களை –
கார்பன் தாள்களாய்க்
கறுக்க வைக்கும்
கந்தகக்காற்று
இருந்தும்
சுடச்சுடவே
நான்
சுவாசித்து வந்தேன்

ஆண்டு முழுவதும் இருந்த
அக்கினி நட்சத்திரத்தில்
எரிந்து போயிற்று
எனது குடை
ஆயினும்
என்
நிழலின் நிழலிலேயே
நீண்டதூரம் ஒதுங்கிவந்தேன்

என்
தலைக்கு மேலே
பருந்துகள் எப்போதும்
பறந்துகொண்டிருந்ததால்
நான் இன்னும்
செத்துவிடவில்லை
என்பதை
நித்தம் நித்தம்
நிரூபிக்க வேண்டியதாயிற்று

என் நிர்வாணத்தை
ஒரு கையால்
மறைத்துக்கொண்டு
என்
அடுத்த கையால்
ஆடை நெய்து
அணிந்து கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று–
என்
பிரவாகம் கண்டு கரைகள்
பிரமிக்கலாம்
ஆனால் –
இந்த நதி
பாலைவனப் பாறைகளின்
இடுக்கில் கசிந்துதான்
இறங்கி வந்தது

தனது
சொந்தக் கண்ணீரும்
சுரந்ததால்
இரட்டிப்பானது
இந்த நதி
இந்த விதை
தன்மேல் கிடந்த
பாறைகளை
முட்டி முட்டியே
முளைத்துவிட்டது

இன்று என்
புண்களை மூடும்
பூக்களினால்
நான்
சமாதானம் அடைவது
சாத்தியமில்லை
இந்தச்
சமூக அமைப்பு
எனக்குச்
சம்மதமில்லை

சரிதம் என்பது
தனி ஒரு
மனிதனின்
அறிமுக அட்டையோ...?
அல்ல
அது
முடிவைத்தேடும்
ஒரு சமூகத்தின்
மொத்த விலாசம்

இதுவோ...
ரணத்தோடு வாசித்த
சங்கீதம்...
எனது
ஞாபக நீரோடையின்
சலசலப்பு...
நசுங்கிய
நம்பிக்கைகளுக்கு
என்
பேனாவிலிருந்தொரு
ரத்ததானம்

இதில்
சில நிஜங்களைச்
சொல்லவில்லை என்பது
நிஜம்.
ஆனால் –
சொன்னதெல்லாம் நிஜம்

நான்
வரைய நினைத்தது
சித்திரம்தான்.
வந்திருப்பவை
கோடுகளே
ஆனால் –
கோடுகளும்
சித்திரங்களே!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மனித நேசம்தான்**
**வாழ்க்கை என்பதை**
**அறிய வந்தபோது**
**என்**
**முதுகில் கனக்கிறது**
**முப்பது வயது.**

(கவிப்பேரரசு வைரமுத்து)

இக்கவிதை தொடர்பான எனது நயப்புரை

தமிழ்நாட்டில் வதியும் கவிஞர் வைரமுத்து அவர்கள், வானம்பாடி என்ற புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

கவிதை முன்னர் செய்யுள் வடிவில் வந்தது. எமக்கு தேவாரம், திருவாசகம் முதல், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், நளவெண்பா முதலான காவியங்களும் செய்யுள் வடிவில் வரவாகின.

மகாகவி பாரதியார், கவிதைத் துறைக்கு மறுமலர்ச்சியை தந்ததுடன், பல வசன கவிதைகளும் எழுதினார். அதனால் எமக்கு அவரது உரைநடையில் குயில் பாட்டும், பாஞ்சாலி சபதமும், அவரது சுயசரிதையும் கிடைத்தன.

1970 கால கட்டத்தில் தமிழகத்திலும் இலங்கையிலும் புதுக்கவிதை இயக்கம் வீச்சோடு எழுச்சி கொண்டது.

மரபுக்கவிதைகள் எழுதிவந்த பலர் புதுக் கவிதைத் துறையிலும் பிரகாசித்தனர். அதே சமயம் மரபை மீறாமல் புதுக்கவிதை எழுதுங்கள் என்ற விமர்சனங்களும் எழுந்தன.

எனினும், புதுக்கவிதைகள் சந்தம், ஓசை நயத்துடனும் வெளியாகத் தொடங்கின.

கவிஞராக அறியப்பட்ட வைரமுத்து அவர்களின் வைரவரிகளில் ஆயிரக்கணக்கான திரைப்படப் பாடல்களும் உருவாகி ரசிகர்களிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளன.

அவர் மரபுக்கவிதைகளும், புதுக்கவிதைகளும் எழுதியவாறே திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதினார். அவற்றிலும் காவிய நயம் இருந்தது.

அவர் எழுதியிருக்கும் கோடுகளும் சித்திரங்களும் கவிதையானது, வாசிக்கும்போது எம்மை நாமே சுயவிமர்சனம் செய்துகொள்ளவும் தூண்டுகிறது.

ஒருவகையில் வலிசுமந்த மேனியராய், தோல்விகளையும் ஏமாற்றங்களையும் தொடர்ந்து சந்தித்த ஒரு மானிடனின் ஆத்மக்குரலாகவும் இக்கவிதை வெளிப்பட்டுள்ளது.

வாழ்வின் தரிசனங்கள்தான் கவிஞர்களினதும் இலக்கியப் படைப்பாளிகளினதும் ஆக்கங்கள். அந்த வகையில் கோடுகளும் சித்திரங்களும் ஒரு மனிதனின் உள்ளக்கிடக்கையை மாத்திரம் பேசாமல், சமூகத்தினதும் இயற்கையினதும், சுற்றுச் சூழலினதும் கோலங்களையும் சித்திரிக்கின்றது.

தோல்விகளையோ, துன்ப துயரங்களையோ, ஏமாற்றங்களையோ, மனதில் ஏற்பட்ட காயங்களையோ திரும்பிப்பார்த்து துவண்டு விடாமல், அவற்றினால் பெற்ற பலன்களை வாழ்க்கைப் பாடமாக்கிக் கொள்வது எங்ஙனம் என்பதையும் எளிய நடையில் சொல்லியிருக்கிறார் இந்தக் கவிஞர்.

பாதங்களின் கீழே மொய்த்துக்கிடந்தவை முட்களாகவிருந்தபோதிலும் அதனால் சிந்திய இரத்தத்தை துடைத்துக்கொண்டு முன்னகர வேண்டும் என்ற தத்துவத்தை இக்கவிதையின் முதல் வரிகள் போதிக்கின்றன.

வழிநெடுக கந்தக காற்று வீசியபோதும், அதனையும் சுவாசித்தவாறு கடந்து செல்வதற்கும் மனதில் உறுதிவேண்டும்.

பூமியின் வெப்பத்தை தணிப்பதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் விமானம் ஏறிச் சென்று கூடிக் கூடி மாநாடுகள் நடத்தி ஆலோசனை செய்கின்றனர்.

ஆனால், இங்கே கவிஞர், அக்கினி நட்சத்திரத்தால் தனது குடை எரிந்துபோனாலும் கூட, நிழலுக்கு தனது நிழலே போதும் என்ற தன்னம்பிக்கையுடன் கடக்கின்றார்.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் மேலே வண்ண வண்ண பறவைகள் மட்டுமன்றி கோழிக்குஞ்சையும் சிறிய உயிரினங்களையும் கவ்விச்சென்றுவிடும் பருந்துகளும் கழுகுகளும் வட்டமிடுகின்றன.

இருந்தாலும், அவற்றின் பார்வைக்குள் சிக்காமல் பயணிக்கும் தந்திரமும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார் கவிஞர்.

ஒவ்வொருவருக்கும் உடை, உறையுள், உணவு வேண்டும். உடை மானத்தை மறைக்க, இருப்பிடம் வாழ்வதற்கான வசிப்பிடம். உணவு உயிர் வாழ்வதற்கு. இவற்றில் ஏதோ ஒன்றில்லாமல் வாழ்வது கடினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தை மறைத்து வாழ்ந்தால்தான் உறையுளும் உணவும் தேடுவதற்கு உழைக்க முடியும்.

ஆடை இல்லையென்றாலும் ஒரு கையால் மறைந்து, மறு கையால் ஆடை நெய்து கொள்வேன் எனச்சொல்வதற்கு எத்தகைய மனவுறுதி வேண்டும். அதனை கவிஞர் நயமுடன் சொல்கிறார்.

ஓடும் நதிகள் மலையிலிருந்து உற்பத்தி யானாலும், அது கடலைச் சங்கமிப்பதற்கு முன்னர், காடு, மேடு பள்ளம், பறைகளையெல்லாம் ஊடறுத்துக்கொண்டுதான் முன்னோக்கிப்பாயும்.

இடையில் பாறைகள் குறுக்கிட்டு விட்டாலும், அவற்றையும் தழுவி குளிர்மைப் படுத்தி விட்டுத்தான் செல்லும். நதியின் நோக்கம் முன்னோக்கிச் செல்வதுதான். அது தனது இயல்பினை என்றைக்கும் மாற்றிக்கொள்ளாது.

மாந்தரும் தமது குறிக்கோளிலேயே அவதானத்துடன் இருக்கவேண்டும் என்பதையும் ஓடும் நதியை உருவகப்படுத்திச் சொல்கிறார்.

எத்தனை அர்த்தம் பொதிந்த வரிகள் பாருங்கள்.

நதி, தன்னோடு விதைகளையும் அழைத்து வருகிறது. அந்த விதைகளும் குறுக்கிடும் பாறை களை முட்டி மோதித்தான் கடந்து செல்கின்றன. எனினும், அதில் ஏற்படும் காயங்களே புத்துயிர் பெற்று பயிராகின்றது. விருட்சமாகின்றது.

இங்கே கவிஞர் வைரமுத்து, நதியின் இயல்பை மத்திரம் சித்திரிக்காமல், தன்னோடு தவழ்ந்துவரும் விதைகளின் இயல்பினையும் காண்பிக்கின்றார்.

வாழவேண்டும் என்ற உணர்வை இந்த வரிகள் புலப்படுத்துகின்றன.

துன்பப்படும்போது கண்டுகொள்ளாமல், துணிந்து வாழ்ந்து நல்ல நிலைக்கு எட்டியதும், போலிப்புகழாரங்கள் சூட்டும் சமூகத்தையும் கவிஞர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

அதற்காக புண்களை மூடும் பூக்களைப்பற்றி நாம் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை எனச் சொல்கிறார்.

சமூகம் என்பது நான்குபேர் என்று சொல்வார் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன். சமூகம் இப்படித்தான் இருக்கும், ஆனால், அது எப்படி இருக்கவேண்டும் எனச்சொல்பவர்தான் சிந்தனையாளன் எனச்சொல்வார் இலங்கையின் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான்.

ஒவ்வொரு மனிதருக்கும் அடையாளம் இருக்கிறது. அந்த அடையாளம் வெறுமனே மாத்திரம் இருப்பின், அந்த மனிதர் வெறுமனே அடையாள அட்டைக்குத்தான் சமம். அந்த மனிதர் சமூகத்திற்காக ஏதும் பயனுள்ள பணிகளைச்செய்தால், அவருக்கென ஒரு முகவரி, நிரந்தர அடையாளமாகிவிடும். இதனையும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் அழுத்தமாக இக்கவிதையில் பதிவுசெய்துள்ளார்.

கடந்து வந்த பாதையை மறப்போமேயானால், செல்லும் பாதையும் இருட்டாகிவிடும் என்பது வாழ்வியல் தத்துவம். அதனையும் கவிஞர் நினைவூட்டுகிறார் இவ்வாறு:

ஞாபக நீரோடையின் சலசலப்பு... நசுங்கிய நம்பிக்கைகளுக்கு என் பேனாவிலிருந்தொரு ரத்த தானம்.

இங்கும் பாருங்கள், இரத்தம் சிந்திவிட்டது எனச்சொல்லவில்லை. தனது இரத்தம் மற்றும் ஒரு உயிரைக் காப்பதற்காக தானமாக பயன் படும் என்கிறார்.

வாழ்வின் சுகம் என்பது, எத்தனையோ சுமைகளைக்கொண்டதுதான் என்பதை புரிய வைக்கிறார்.

குழந்தைகள் தமது கையில் பேனையோ பென்ஸிலோ, கிடைத்துவிட்டால் சுவரில் கோடு களில் தொடங்கித்தான் ஏதாவது வரைவார்கள். அதுவே சித்திரமாகிவிடும்.

அத்தகையதே எமது வாழ்க்கையும். அதற்கும் ஒரு தொடக்கம் இருக்கிறது. என்பதை கோடுகளை உவமானமாக சொல்கிறார் கவிஞர். கருவில் உற்பத்தியாகும் குழந்தைதான் பின்னர் பல சந்ததிகள் உருவாவதற்கு காரணமாக திகழ்கின்றன.

அவ்வாறே கோடுகளும் கோலங்களா கின்றன. அவற்றை சித்திரம் எனவும் அழைக்கின்றோம்.


கவிப்பேரராசு வைரமுத்து அவர்களின் இக்கவிதை மிகச்சிறந்தது. இதில் இடம்பெற்றுள்ள வரிகளைப்பற்றி மணிக்கணக்கில் பேசவும் முடியும் பக்கம் பக்கமாக எழுதவும் முடியும்.

OOO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறுங்கதை

# ஒழுக்கசீலன்



‘அவர் பெயர் அரியநாயகம். பெயருக் கேற்றாற் போல அருமையான மனிதர் அவர். ஆனால் இப்போது பரிதாபத்துக்குரியவராய் ஆகி விட்டார். சமீபத்தில் தான் அவர் அருமை மனையாள் காலமாகிவிட்டாள்! நல்ல வசதியான வீட்டில் தனியே தான் இருக்கிறார். கடந்த காலத்தில் மனையாளோடு இனிய இல்லறம் நடத்தியதை நினைவுகூர்ந்து இனிய நினைவுகளில் சஞ்சரிப்பார். அவர் மனதுக்கு தற்போது அமைதியை சுகத்தை அளித்துக் கொண்டிருப்பது அந்நினைவுகளேயாம் ......... இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு. அவர்கள் இப்போது வெளிநாட்டில் குடித்தனமாக நல்லபடியாக வாழ்கிறார்கள். தாயிருக்கும் போது மணிக்கணக்காக தொலையில் பேசுவார்கள். வீடியோவில் பேரப்பிள்ளைகளை காட்டுவார்கள். அவர்கள் மழலைப் பேச்சைக் கேட்டு மகிழ்வார்கள். இப்போது இப்பேச்சுக்கள் காட்சிகள் எல்லாம் குறைவடைந்து விட்டன. தனிமை வாட்டிடவே செய்யும்!

தனிமைக்கு ஆறுதலளித்துக் கொண்டி ருப்பது மனைவியோடு குடும்பம் நடத்திய இனிய நினைவுகள் தான்! அவர் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர். இப்போது இளைப்பாற்றி சம்பளம் வருகிறது. அவர் செலவுக்கு தாராளம். தனிமைக்கு ஆறுத லளிக்கும் இணையில்லா துணையாளனின் இனிதான நினைவுகளோடு எதையாவது வாசிப்பார். பத்திரிகை வாசிப்பார். தொலைக்காட்சி பார்ப்பார். இப்படியே மனமகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும் மன அமைதியாக இருக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்.



**சூசை எட்வேட்**

இப்போது நேரம் பகல் ஒரு மணி இருக்கும் தெருக்கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அவருக்கு விளங்கிவிட்டது யார் வருகிறார்கள் என்று. மூன்றாவது வீட்டிலிருக்கும் சின்னராசா தான் சாப்பாடு கொண்டு வருகிறார் என்று எதிர்பார்த்து வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு அவரை வரவேற்க தயாராகிக் கொண்டிருந்தார். ஆனால் வந்ததோ அவர் மனைவி தான். புன்னகையோடு தட்டேந்தி வந்து உள்ளிட்டாள். உணவக அறையில் உள்ளிட்டு கொண்டு வந்ததை பக்குவமாக வைத்து விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். இளநகையோடு இவர் கேட்டார் ‘ஏன் இண்டைக்கு சின்னராசா வரயில்ல? ‘அவரண்ணன் ஏதோ அலுவலா வெளிய போயிற்றார் அது தான் நான் கொண்டு வந்தன்’ மீண்டும் இளநகையோடு வெளியேறிவிட்டாள். இவர் மனதில் நினைத்தார். ‘இந்தப் பெண்களைக் கண்டால் ஆண்களும் தலைகுனியத்தான் வேணும், மனதை சலனப்படுத்தி விடுவார்கள்!

மனைவி மரணித்த பிறகு சாப்பாட்டில் மனமில்லாதிருந்தார். என்ன செய்வது வாழ்ந்து தானே தொலைக்கவேண்டும் என்று கடையில் எடுத்து சாப்பிட்டார். இதப்படவில்லை என்றாலும் அவர் அதை பெரிதுபடுத்தவில்லை. சின்ராசும் மனைவியும் வந்து சொன்னார்கள். ‘ஏன் நீங்க கடைச்சாப்பாட்டைத் திண்டு உடம்பக் கெடுத்துக் கொள்ளுறீங்க! நாளையில இருந்து நாங்கதருவம் சாப்பாடு’ என்று சொன்னதன் பின் தான் இந்த ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி பக். 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவை 75 :

## நித்தமும் கவிதை பூக்கும் நிலவு

செ. சுதர்சன்

அள்ளிடும் வாஞ்சை அன்பை
ஆள்வதில் அரசு நெஞ்சைத்
துள்ளவே வைக்கும் பாக்கள்
தூவிய நாக்கு சின்னக்
கள்ளியில் கூட நேசம்
கண்களில் கனவுத் தேசம்
புள்ளி நீ எங்கே? எங்கள்
புதுவையே எழுபத்தைந்தா..!?

நிலமெலாம் திரிந்து பாட்டின்
நீளமாய் விரிந்தாய் வீரர்
பலமெனப் படர்ந்து மண்ணின்
பாஷையாய் மலர்ந்தாய் என்றும்
வலம்வரு காற்றில் குந்தி
வரிகளில் வாதை சொன்னாய்
கலமெனப் பேனா ஏந்தி
களப்பணி வரித்து நின்றாய்!

விடுதலைப் பானை பொங்க...
வீறுகொள் அடுப்பை மூட்டும்
சுடுதணல் கவிகள் தந்தாய்!
சூழுமோர் பகையை உந்தன்
விடுகவி கொல்லும் என்றாய்!
விரிகதிர்ப் பொலிவை மண்ணில்
நடுமொளி வெல்லும் என்றாய்!
நாவிலே நாடு கொண்டாய்!

சாவுகள் தழுவும் மேனிச்
சந்தனப் பேழை பாடி
நோவுகள் தாங்கும் மக்கள்
நொடிகளை நொந்து பாடி
நாவுகள் நயக்கும் நஞ்சின்
நன்மையை நயந்து பாடி
வேவுகள் துளைத்துத் தேடி
வேர்த்திடப் பொடியை வைத்தாய்!

மேதைகள் வியந்து போற்ற
மேடையில் கவிதை சொல்வாய்!
பேதையும் தலையை ஆட்டும்
பேச்சிலே சபையை வெல்வாய்!
வாதையின் போதும் எம்மை
வாவெனத் தழுவி நிற்பாய்!
“பாதையில் சென்றாய்“ செய்தி...
பயணமா இன்னும்... இன்னும்...?

புலினியும் புல்லும் பூவும்
பூத்திடும் மலரும் யாவும்
கலியினி இல்லை என்றே
கமழ்ந்திடு வாசம் எல்லாம்
பொலியினி இங்கு என்றே
பொங்கி நீ கவிதை சொல்லி,
பலியினில் வீரர் பாயப்
பரணியுன் கவியென்றாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்தனில் எழுத்தைத் தோய்த்து
போட்டதால் "வெளிச்சம்", எங்கள்
ஊர்களின் உலைவு எல்லாம்
உண்மைசேர் படைப்பில் ஊர்ந்து
பார்தனில் பரவச் செய்தாய்!
பரவியே தமிழை உந்தன்
வேரென வரித்து நின்றே
"வேங்கையாம் கவிஞன்" என்றாய்!

பத்தியால் பாடும் போதும்
பரமனைச் சிரிக்க வைத்து
முத்தியைக் கேட்காய் உந்தன்
முறுவலை காட்டி நின்றே
சத்திய வேள்வி வெல்லும்
சங்கதி கேட்டு நிற்பாய்!
நித்தமும் கவிதை பூக்கும்
நிலவென உலவி வந்தாய்!

கழுத்திலே நஞ்சு தொங்க
கண்ணிலே கவிதை தங்க
அழுத்திய போரை வெல்லும்
ஆசையே நெஞ்சில் பொங்க
எழுத்தினை ஏந்தி நின்றே
எரிகவிச் சமர்கள் கண்ட
பழுத்ததோர் கவிஞன் உன்னைப்
பைந்தமிழ் என்று காணும்!?

மதுவையே சொல்லில் ஊற்றி
மயங்கவே வைத்து நல்ல
எதுகையும் மோனையோடு
எத்தனை கவிகள் தந்தாய்!
எது கையும் கொடுக்காக் காலம்
எழுந்துமே தின்றபோது
புதுவையே புறப்பட்டாய் நீ...
புகுந்ததாய்ச் செய்தி மிச்சம்!

03.12.2023

---

27ஆம் பக்கத் தொடர்ச்சி....

அவர்கள் உணவு பரவாயில்லை என்றாலும் மனையாள் மனமறிந்து ருசியறிந்து ஆக்கிப் படைப்பது போல வராது தான் என்றாலும் பரவாயில்லை. கிழமைக்கொருக்கா செலவுத்தொகையை மேலதிகமாக கொடுத்தே வருவார்.

அடுத்தநாளும் சின்னராசாவின் மனைவி தான் உணவுத் தட்டேந்தி வந்தாள் 'ஏன் இண்டைக்கும் நீங்க கொண்டு வாறீங் அவர் எங்க?' 'இண்டைக்கு அவருக்கு உடம்பு சரியில்ல பேசாம படுத்துக் கிடக்கிறாரு அது தான் நான் கொண்டு வந்த'

மூன்று நாட்களாக அவளே சாப்பாட்டு தட்டோடு வந்து போய்க்கொண்டிருந்தாள். அரியநாயகத்துக்கு தர்மசங்கடமாகவே இருந்தது! இப்போதெல்லாம் அவள் வருகை தரும் போது பக்கத்து வேலி சரசரக்கும்! நோட்டமிடுகிறார் போலும்! .. நாலாம் நாள் வழமை போல அவன் தட்டேந்தி புன்னகை சிந்தி வந்தாள். போக எத்தனிக்கையில் அரியநாயகம், 'கொஞ்சம் நில்லுங்கோ ஒரு கதையிருக்கு' 'என்னண்ணன் சொல்லுங்கோ' நீங்க வீடு தேடி வந்து சாப்பாடு தந்து உபசரிக்கிறதுக்கு மெத்த நன்றி சொல்லத்தான் வேணும்.. ஆனா ஊர்வாய் பொல்லாதது பாருங்க. நாலுவிதமாக கதைப்பாங்க! நானும் இத்தனை வயதாயிற்று ஒரு கெட்டதுட்ட பேர் வாங்காமல் வாழ்ந்துற்றன் இனியும் அப்பிடித் தான் வாழ்ந்து முடிக்க விரும்புறன். நீங்களும் நல்ல பேரோட வாழ்ந்து முடிக்க வேணும்! ஆகையால நீங்க கொண்டு வாறதெண்டா எனக்கு வேணாம்'. ... அவள் பரந்த சிரிப்பை உதிர்த்தாள். அண்ணன் சொல்லுறது சரி தான். இனி நான் வரமாட்டன். அவருக்கு இப்ப சுகம் தான். அவர் தான் வருவார்.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# சுபா

மண்டைதீவு கலைச்செல்வி



சுபாவின் கைத்தொலைபேசி மூன்று தடவைகள் அடித்து ஓய்ந்தது. இரவு பதினொரு மணி இருக்கும். அந்த இரண்டு மாடிகளைக் கொண்ட அழகிய வீட்டின் முன் ஹாலிலும், சுபாவின் அறையிலும் மட்டும் மின்விளக்குகள் ஔிர்ந்து கொண்டிருந்தன. அது சுபா தையல் வேலை செய்வதற்காக மட்டும் பயன்படுத்தும் அறை. தன்னையே மறந்து தையல் மெசினில் தலையைச்சரித்தவள் உறங்கிப்போனாள். அம்மா பார்வதி எவ்வளவு சொல்லியும் சுபா எழுந்து சாப்பிடவும் இல்லை. தூங்குவதற்கு தன்னுடைய அறைக்குப் போகவும் இல்லை. விடிந்தால் பத்து மணிக்குள் மூன்று சாறி பிளவுஸ் தைத்து ஆகவேண்டும்.

“முந்தித்தான் நாங்கள் கஸ்டப்படேக்க நீ கண் முளிச்சுத் தைச்சனி. அப்பான்ர உழைப்போடு உன்ர உழைப்பும் சரிக்குச்சரியாய் இருந்தது. ஆனால் இப்பவும் நீ ஏன் கஸ்டப்படவேணும்? ஓடர்களைக் குறைச்சு எடு” என்று சுபாவின் அம்மா அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் சுபாவுக்கு யாருடைய முகத்தையும் முறித்துப் பேசிப் பழக்கமில்லை.எல்லோருமே அவளிடம் வாடிக்கையாக வருகிறவர்கள்தான். அந்த ஊரில் திருமணம் சாமத்தியவீடு பிறந்தநாள் ..கோவில் திருவிழா என்றால் சுபாவுக்கு ஓடர்கள் கூடிவிடும். அவளின் கைபட்டால் உடையும், உடுத்துபவர்களும் அழகாகி விடுவார்கள் என்று ஊரில் பலரும் சொல்லிக்கொள்வதுண்டு. சாதாரணதரம் எழுதிவிட்டு ஆறு மாதம் பொழுது போக்கிற்காகத் தையல் பழகியவள். பின் நாட்களில் அதுவே அவள் சுயதொழிலாகவும் மாறும் என்று எப்போதும் அவள் நினைக்க வில்லை.

சுபாவுக்கு மூன்று சகோதரிகள். கடைசியாக ஒரு தம்பி. சுபாவின் அப்பா செல்லத்துரை ஒரு விவசாயி. ஊரில் தீவகத்தில் தென்னைகள் பனைகள் நிறைந்த இருபது பரப்புக்காணியும், வயல்காணியும் புகையிலைத்தோட்டம் செய்வதற்கென பத்துப்பரப்புக்காணியும் அவருக்கென இருந்தது.

1990 கோட்டை அடிபாட்டின் போது எல்லாம் அழித்து எரிக்கப்பட்டபோது, ஒட்டு மொத்தமாக தீவுகமக்கள் இடம் பெயர்ந்த போது, சுபாவின் குடும்பமும் நிர்க்கதியாகி நிலை குலைந்து போனது. ஒரு சிலநாட்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து விட்டு பூநகரிப்பாதையூடாக, கிளிநொச்சிக்கு வந்து உருத்திரபுரத்தில் செல்லத்துரையின் தூரத்து உறவுக்காரரான சுந்தரத்தின் காணியில் ஒரு சிறிய வீடு போட்டு இருந்தார்கள். நிவாரணத்திற்கென தரும் அத்தியாவசிய சாமான்களோடு மிக கஸ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தபோதுதான் சுபா தன்னுடைய கழுத்தில் கிடந்த சங்கிலியை அம்மாவின் சம்மதம் இல்லாமல் விற்று ஒரு தையல் மெசின் வேண்டித் தைக்க ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் ஒருவர் இருவர் என வந்து தைத்தார்கள். சுபாவின் தொழில் நேர்த்தியும் கடின உழைப்பும், நிற்க இருக்க நேரமில்லாத ஒரு தையல் காரியாக உருவெடுக்க வைத்தது.

அவர்களில் வாழ்வில் அது ஒரு பொற்காலம் தான். செல்லத்துரையும் சிறிய அளவில் தேங்காய், மரக்கறி என்று வியாபாரம் செய்தார். அந்த ஊர் மக்களின் ஆதரவும் வரவேற்பும் அவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்திருந்தது. சுபாவுக்கு அடுத்தவளான மாலினிக்கு படிப்பு ஓடவில்லை. சாதாரண தரத்தோடு வீட்டில் இருந்து கொண்டாள். மற்றவர்கள் மூவரும் தொடர்ந்து படித்தார்கள்.

இந்த வேளையில்தான் ஆனையிறவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கிளிநொச்சி நகரப் பகுதியிலும் அதை அண்டிய கிராமங்களிலும் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கியது. உருத்திர புரத்திலும் விமானத்தாக்குதலால் பல உயிர்களும் காவுகொள்ளப்பட்டவேளை உக்கிரமான யுத்தம் கிளிநொச்சியை நோக்கி நகர்த்தப்பட்ட வேளை.. அங்கிருந்தும் மக்கள் அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் போன்ற இடங்களை நோக்கி தஞ்சம் புகுந்தனர்.

சுபாவின் குடும்பமும் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரத்திற்கு வந்திருந்தார்கள். ஏற்கனவே பல இடப் பெயர்வுகளைச் சந்தித்த குடும்பம் என்ற படியால் சுபாவின் வீட்டில் வாகனம் விட்டு ஏற்றுமளவுக்கு,தையல் மெசினைத் தவிர வேறு பொருட்கள் இருக்கவிலை. தங்கள் உடுப்புகளையும் புத்தகங்களையும் சமையல் பாத்திரங்களையும் ஒரு உரப்பையில் எடுத்துக்கொண்டார்கள்.

சுபாவின் குடும்பத்துக்கு,உருத்திரபுரம் போன்று ஸ்கந்தபுரம் அமையவில்லை. வசதி கள், தொழில்வாய்ப்புக்கள் எதுவும் சரியாக நிலை பெறவில்லை.

நோய்கள்.. மருந்துத்தட்டுப்பாடு.. என்பதோடு.. நிவாரணச் சாமான்களும் கிடைக்க வில்லை. இதற்குள் சுபாவின் இரண்டாவது தங்கை நிலானியும் கடைசித்தங்கை அமிர்தாவும் பெரிய பிள்ளைகளாகி விட்டார்கள். வயதுக்கு வந்த நான்கு பெண்பிள்ளைகளையும் கடைக்குட்டி சேரனையும் வைத்துக்கொண்டு செல்லத்துரையும் பார்வதியும் தவித்துப்போனார்கள். அவை மிகுந்த சவால்களும், போராட்டங்களும் நிரம்பிய நாட்களாக அமைந்திருந்தன. நோயினாலும்.. பொருளாதார நெருக்கடிகளாலும்.. யுத்தத்தி னாலும்.. மனித மரணங்கள் மலிந்துபோன நாட்கள் அவை.

கோரத்தின் உக்கிரப் பிடியில் நகர மறுத்த நிமிடங்கள் அவை.

எப்படித்தான் அவைகளை கடந்து வந்தோமோ? என இப்போதும் சுபா நினைத்துப் பார்ப்பதுண்டு.

அதன் பின் ஒரு குறுகிய கால யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி, சுபாவின் குடும்பம் உயிரைப் பணயம் வைத்து வவுனியாவுக்கு வந்து அங்கு ஒரு கிழமை முகாமில் தங்க வைக்கப்பட்டு.. பின்பு திருகோணமலை சென்று அங்கிருந்து காங்கேசன்துறை வந்தடைந்து அதன்பின் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். பார்வதியின் சகோதரி ஒருவர் உரும்பிராயில் ஒரு தோட்டக்காணியுடன் சேர்ந்த வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொடுத்தாள். அந்தக் காணியில் மரக்கறி வகைகளை பயிரிட்டார் செல்லத்துரை. சுபாவும் மீண்டும் தன் தையல் வேலைகளை தொடங்கினாள். அம்மா பார்வதியும் மாலினியும் சமையல் தவிர்ந்த நேரம் போக அப்பாவுக்கு தோட்டத்தில் உதவியாய் இருந்தார்கள். ஆரம்பத்தில் கஸ்டப்பட்டாலும் நாட்கள் செல்லச் செல்ல அவர்களுடைய வருமானம் ஓரளவிற்கு நிறைவாக இருந்தது. சுபாவின் இரு தங்கைகளும் தம்பியும் படித்தார்கள். இரண்டு மூன்று வருடங்கள் சுமாராக ஓடியது.

நான்கு பெண் பிள்ளைகளையும் எப்படி வாழ வைக்கப்போகிறோம் என்ற கவலை பார்வதியை இடைக்கிடையே உலுக்கி எடுத்தது. "கையில மடியில ஒண்டுமில்லாமல் புறோக்கர் மாரிட்ட குறிப்பை என்னண்டு குடுக்கிறது" என்று பெருமூச்சு விடுவாள் பார்வதி.

"படைச்சவன் படி அளப்பான்"

என்பார் செல்லத்துரை.

அந்த நேரத்தில்தான் சுபாவுக்கு ஒரு திருமணம் வீடுதேடி வந்தது

"மாப்பிள்ளை வெளிநாட்டில இருந்து வந்து நிக்கிறார். அவருக்கு மூன்று சகோதரங்கள். எல்லாரும் வெளிநாடுதான். தாயும் தகப்பனும் இஞ்சதான் இருக்கினம்" என்று தொடங்கி விபரங்களைக் கூறினான் ப்ரோக்கர்.

"நீங்கள் சீதனம் ஒண்டும் குடுக்கத் தேவையில்ல.. எல்லாம் அவையள் பாத்துக் கொள்ளுவினம்."

என்றும் கூறினான். சுபாவின் வீட்டில் இருந்து பக்கத்து தெருவில்தான் மாப்பிள்ளை வீடும் இருந்தது. செல்லத்துரைக்கும் மாப்பிள்ளையின் பெற்றோரைத் தெரியும். நல்ல பண்பானவர்கள்.விசாரணைக்கு இடமில்லாமல் சட்டுப்புட்டென்று திருமணமும் நடந்தது. சுபாவுக்கு வேண்டிய நகைகளும் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணச் செலவையும் மாப்பிள்ளை பகுதியே செய்தார்கள். வீட்டில் உள்ள அனைவருக்கும் உடுப்புகளும் எடுத்தார்கள். திடீரென அதிஸ்ட தேவதை வந்து கதவு தட்டியது போன்று சந்தோசத்தில் திக்கு முக்காடிப்போனார்கள் சுபாவின் குடும்பத்தினர்.

திருமணம் பதினைந்து நாட்களில் நிச்சயமாகி முடிந்தது. மாப்பிள்ளை அகிலனும் ஜேர்மன் போய்விட்டார். சுபாவும் மாமா மாமியுடன் போயிருந்து கொண்டு, தன்னுடைய தாய் தகப்பனைப்போல பக்குவமாய் பார்த்தாள். அகிலன் சுபாவோடு அவர்கள் வீட்டு லாண்ட் போனில் ஒவ்வொரு நாளும் கதைப்பான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அகிலனிடமிருந்து அழைப்புக்கள் வந்தபடியே இருக்கும். அது பல மணிநேர உரையாடல்களாக நீண்டு கொண்டே இருக்கும். சில நேரங்களில் நடுராத்திரியின் முழு நேரப்பொழுதையும் காதல் கவ்விக்கொள்ளும். நித்திரையற்ற அவ்விரவுகள் அகிலனின் குரலோடே விடிந்துகொண்டிருந்தது. ஜேர்மனி நகரத்தின் நேரங்களிற்கும் விடியலிற்கும் சுபாவின் கண்கள் பழக்கப்பட்டிருந்தது. அன்புகள் அளவற்று பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன.

இதற்கிடையில் செல்லத்துரை ஊரில் இருந்த காணிகள் சிலவற்றை விற்று உரும்பிராயில் ஒரு நான்கு பரப்பு காணி வேண்டி இரண்டு பரப்பை தங்களுக்கும், இரண்டு பரப்பை மாலினிக்கும் எழுதி விட்டார். பார்வதி யிடம் இருந்த ஒரு சில நகைகளையும்.. மாலினிக்கென சில நகைகளையும் செய்து ஒன்று சேர்த்து மாலினிக்கு அந்த ஊரிலேயே பலரக்கு கடை வைத்திருக்கும் சுரேசுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அடுத்து வந்த ஆண்டில் நிலானிக்கும் ஒரு வெளிநாட்டுச் சம்மந்தம் தேடிவந்தது. நிலானியுடன் கூடிப்படித்த நண்பியின் அண்ணன், நிலானியின் போட்டோவை தனது தங்கையின் ஆல்பத்தில் பார்த்துவிட்டு பெண் கேட்டு வந்தார்கள்.

அவர்களின் குடும்பத்தில் எல்லாமே சரியான நேரத்தில் சரியாகத்தான் நடந்து கொண்டிருந்தது. ஆனால் மூத்தவளிற்கு வெளிநாட்டு மாப்பிள்ளை என்று விழுந்தடித்து திருமணம் செய்து மூன்று வருடங்கள் ஆகியும் அவள் இன்னமும் கணவரிடம் போய் சேரவில்லை. காரணமும் புரியவில்லை, என்ற கவலையில் நிலானியின் திருமணத்துக்கு சம்மதம் தெரிவிக்க செல்லத்துரையும் பார்வதியும் யோசித்தார்கள்.ஆனால் நிலானி அந்தத் திருமணத்தைச் செய்வதற்கு மனம் விரும்பினாள். திருமணமும் சிறப்பாக நடந்தது. ஒரு வருடத்துக்குள் நிலானி லண்டன் போய்விட்டாள்.

அவள் போன அடுத்த வருடமே நிலானி தன் கணவரின் நண்பரான லண்டனில் இருக்கும் சுகுமாருக்கு அமிர்தாவை திருமணம் பேசி முடித்தாள்.

“மூத்த மாப்பிள்ளை வந்த யோகம்தான்” என்று ஊர்முழுதும் பேசிக்கொண்டார்கள். அமிர்தாவும் லண்டன் போய்விட்டாள்.கடைக்குட்டி சேரனும் படிப்பு முடித்து கிளிநொச்சிக் கச்சேரியில் வேலை செய்து கொண்டிருந்தான். அவனோடு வேலை பார்க்கும் நர்மதாவை விரும்பி, திருமணமும் செய்துகொண்டு வட்டக்கச்சியில் நன்றாக இருக்கிறான்.

செல்லத்துரை தாங்கள் குடியிருக்கும் காணியை அமிதாவுக்கு எழுதிக்கொடுத்திருந்தார்.

காலம் யாருக்காகவும் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது. வருடங்கள் ஐந்து ஆறு கழிந்த பின்பும் சுபாவின் வாழ்வில் மாற்றம் வராதது எல்லோருக்கும் கவலையைக் கொடுத்தது.

“அக்கா.. அத்தான் என்னவாம்? நாங்கள் போன் எடுத்தாலும் எடுக்கிறாரில்லை..” என்று தங்கைமாரும் சுபாவைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். சுற்றி இருப்பவர்களின் கேள்விக்கும், சொந்தக்காரர்களின் கேள்விக்கும் சுபாவிடம் பதில் இருக்கவில்லை. முன்போல எதுவும் தனக்கு நன்றாக நடக்கவில்லை என்பதை உணரத்தொடங்கிவிட்டாள். மாற்றங்கள் அவள் வாழ்வில் ஏற்படவில்லை. ஆனால் அகிலனிடம் ஏற்பட்டிருந்தது. அவனிடமிருந்து வரும் அழைப்புக்கள் முற்றாகவே குறைந்துவிட்டது. இரண்டு மூன்று நாட்களிற்கு ஒரு முறை வரும் அழைப்புக்கள் நீடிக்கும் நேரமும் குறைந்து போனது. காரணங்கள் கேட்டால், துடிக்கும் வக்கிரமான கோபத்தின் வார்த்தைகள் மட்டும் பதிலாய் வரும்.

“கோபமா கதைச்சாலும் பரவாயில்ல, கொஞ்ச நேரம் கதையுங்களன்” கண்ணீரோடு கேட்ட கெஞ்சல்களிற்குக்கூட அகிலனிடமிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் இல்லை. காத்திருப்புக்கள் கண்ணீரோடு போனது. தொலைபேசியும் அவளும் யாரும் தேடாத அநாதையாய் கிடந் தார்கள். எந்த மாற்றத்திற்கும் விடை கிடைக் காமல் தவித்தாள் சுபா.

அளுடைய பெற்றோருக்கும் நிலைமை புரிந்தாலும் அதற்காக அவர்களால் வருந்த மட்டும்தான் முடிந்தது. சுபாவும் தன் மாமா மாமியைக் கஸ்டப்படுத்தாது மௌனமாய் இருந்தாள். அவளுக்குள் ஒரு எரிமலை வெடித்துச் சிதறத் தயாராகிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் காய்ச்சல் என்று படுத்த அவளுடைய மாமா திடுமென போய்ச் சேர்ந்து விட்டார். மாமி தனித்துப்போன உணர்வில் தவித்துப் போனார்.

மாமாவின் செத்தவீட்டிற்கு வெளிநாட்டில் இருந்து அகிலனின் இரண்டு சகோதரிகள் வந்திருந்தார்கள். அகிலன் வரவில்லை. சுபாவைப்பற்றி யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை நாட்கள் கடந்தநிலையில் அகிலனின் சகோதரி ஒருவர் சுபாவின் மாமியை ஸ்பொன்சர் பண்ணி எடுத்தாள்.

எல்லாக் கடமைகளும் முடித்துவிட்டு, எட்டு வருடக் காத்திருப்பின் தோல்வியையும், விடை யில்லா கேள்விகளையும் சுமந்து கொண்டு தன் வீடு வந்தாள் சுபா. அவளுடைய அப்பாவும் அம்மாவும் தங்கை மாலினியும் கண்கலங்க சுபாவை வரவேற்றார்கள். முன்பு வீடு இருந்த இடத்தில் இரண்டு மாடிகளைக்கொண்ட.. சகல நவீனத்துவ வசதிகளோடு ஓர் அழகிய வீட்டை அமிர்தா கட்டி இருந்தாள். தன்னுடைய தாய் தந்தை வசதியாய் வாழ்வதையிட்டு சுபா ஒரு புறம் மனநிறைவும் சந்தோசமும் அடைந்தாள். சுபாவின் தையல் மெசின் பவித்திரமாக ஒரு அறையின் மூலையில் துணி ஒன்றினால் மூடப்பட்டிருந்தது.

மாலினியும் தன் தகுதிக்கேற்ப ஒரு வீட்டைக் கட்டி இருந்தாள். காலத்தின் நகர்வு, சுபாவின் வாழ்வைத்தவிர, எல்லோர் வாழ்விலும் நல்ல மாற்றங்களைக்கொடுத்திருந்தது.

அகிலனைப்பற்றி சுபாவிடம் கேட்பதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. வீணாக அவசரப்பட்டு பிள்ளையின் வாழ்க்கையைத் தொலைத்து விட்டோமே என்கின்ற குற்ற உணர்வில் சுபாவின் பெற்றோர் தவித்துப் போயிருந்தார்கள். நாட்கள் நகர நகர சுபாவின் மனநிலை ... உணர்வுகளைஅவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. ஊர் முழுதும் சுபாவுக்காக அனுதாபப்பட்டது.

"சரியான குடியாம்"

"அவனுக்கு அங்கையும் ஒரு குடும்பம் இருக்காம்"

"போதைவஸ்து கடத்தி ஜெயிலில இருக்கிறானாம்."

என்று .....பலவிதமாய்கதைத்தார்கள். எல்லாப் பேச்சுக்களையும் வார்த்தைகளையும் கடந்து வரப் பழகிவிட்டாள்.

ஏதோ ஒரு காரணத்தால் .....சுபாவின் வாழ்வு.. இளமை .. எதிர்பார்ப்புக்கள்... கட்டிவைத்த கனவுகள்... எல்லாமே எங்கோ தேடமுடியாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில் தொலைந்து காணாமல் போய் விட்டது, என்பது மாத்திரம் சுபாவுக்குப் புரிந்தது.

மாலினிக்கும் அடுத்தடுத்து நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்தவன் ரகுராம் சுபாவோடு வந்து ஒட்டிக்கொண்டான். மாலினியின் பிள்ளைகள் அந்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்குமாய் ஓடி ஆடி மகிழ்வதில் சுபாவுக்கும் அவர்கள் பெற்றோருக்கும் கொஞ்சம் நிம்மதியைக் கொடுத்தது.

சுபா ரகுராமை தன்னுடனேயே வைத்துக் கொண்டாள். எல்லா இழப்புக்களின் இடைவெளி களையும் ரகுராம் நிரப்பி இருந்தான். அவனைக் குளிப்பாட்டுவது சாப்பாடு ஊட்டுவது பாடம் சொல்லிக்கொடுப்பது.. அவனது உடுப்பைக் கழுவிப்போடுவது.. என..தன் குழந்தையாய் பாவித்து மெய்மறந்தாள் சுபா. சுபாவின் இந்த மாற்றம் கண்டு மாலினியும் தன் பிள்ளையை விட்டுக்கொடுத்தாள். ஒரு வேலி இடைவெளியில் இருவீடுகளும் இருந்ததால் மாலினிக்கு அது பெரிய விடயமாகத் தெரிய வில்லை.

சுபா மீண்டும் தைக்கத் தொடங்கினாள். ரகுராம் பாடசாலை போய் வருவான். அவனுடைய படிப்புச் செலவுகளையும் தானே கவனித்தாள் சுபா. லண்டனில் இருக்கும் இரண்டு தங்கை களும் தங்கள் குடும்பங்களோடு வருடத்துக்கு ஒருமுறை வந்து போனார்கள். தம்பி சேரனும் பிள்ளைகளோடு மாதம் ஒரு முறை வந்து போவான். மாலினியின் பிள்ளைகளும் வளர்ந்து படிக்கத்தொடங்கி விட்டார்கள். மாலினிக்கு மாத்திரம் கொஞ்சம் பணக்கஸ்டம் இருந்து வந்தது. அவளுடைய பிள்ளைகள் எல்லோரும் பெரியம்மா.. பெரியம்மா.. என்று ஓடி வருவார்கள். அவர்களை அன்போடு வழி நடத்தினாள் சுபா. சில நாட்களிலயே அகிலனை மறந்தே போனாள் சுபா.

மாடி வீட்டில் வாழ்ந்தாலும்..முன்புபோல் பாடுபட்டு உழைக்க வேண்டிய அவசியம் இல்லாதபோதும் செல்லத்துரையும் பார்வதியும் அமைதி இன்றியே வாழ்ந்தார்கள்.

ரகுராம் வளர்ந்த பிறகு சுபாவைப்பற்றிய விடயங்களை மாலினி சொல்லி அறிந்து கொண்டான். அவன் சுபாவை ஒரு தாயின் நேசிப்பில் இருந்து தாண்டி அவளை கடவுளாய் மதித்தான். பெரியம்மா.. என அழைப்பதோடு சிங்கப்பெண்ணே.....ராஜமாதா... என்றெல்லாம் அழைத்து அவளைச் சந்தோசப்படுத்துவான்.

சுபாவின் போன் மீண்டும் அடித்தது. பதறிப் போய் விழித்தாள் சுபா.

இரவு பன்னிரெண்டு மணி ஆகி இருந்தது. எல்லாம் போட்டது போட்டபடி தையல் மெசினின் மேல்தூங்கி விட்டோமே என நினைத்தபடி போனை எடுத்துப் பார்த்தாள். புது நம்பரில் இருந்து ஆறு மிஸ் கோல் வந்திருந்தது. அவள் அம்மாவும் அப்பாவும் நன்றாகத் தூங்கி இருந்தார்கள். மாலினியின் வீட்டில் ஒரு அறையில் வெளிச்சம் தெரிந்தது. மாலினியின் மகள் படித்துக் கொண்டிருக்கிறாள் என ஊகித்தாள். ரகுராம் வீட்டில் இருந்தால் நேரத்துக்கு சாப்பாடு ..நித்திரை.. என சுபாவை கருத்தோடு ..பிடிவாதமாய் நின்று செய்விப்பான்.

ம்...நாட்களும் இவ்வளவு வேகமாய் நகர்ந்து விட்டது. ரகுராம் இயன் மருத்துவம் இரண்டாம் வருடம் பேராதனை பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறான். சுபாவுக்கும் ஐம்பத்தி ஐந்து வயதாகிறது. மண்ணிலே எழுதித் தண்ணீரால் கழுவி விட்டது போல் சுபாவின் வாழ்வும் கரைந்து... கடந்துகொண்டிருந்தது.

சுபாவுக்கு திருமணமாகி இருபத்தி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. அகிலன் அவளை ஏன் திருமணம் செய்தான்? ஏன் தன்னோடு இவளை அழைக்க முடியாமல் போனது? இதன் பின்னணி யில் யாராவது இருக்கின்றார்களா? அல்லது சுபாவைப் பிடிக்காமல் போனதா? முதல் ஐந்து வருடங்களும் சும்மாதான் கதைத்தானா? பெற்றோரின் வற்புறுத்தலுக்காகத்தான் கல்யாணம் செய்தானா? உண்மையிலேயே அவனுக்குத் தகாத முறையில் குடும்பம் இருக்கிறதா? சுபாவின் தங்கைகள் நிலானி அமிர்தா இருவருக்கும் வெளிநாட்டில் தானே மாப்பிள்ளை எடுத்தோம். நாட்டு நிலை காரணமாய் வேறு வழியின்றி வெளிநாடு போன எமது இளைஞர்கள் எவ்வளவோ பேர் தாங்கள் வாழ்ந்த குடும்பங்களையும்.. தங்கள் குடும்பங்களையும் தூக்கி சுமந்து கொண்டு தானே இருக்கிறார்கள் .அமிர்தாவின் கணவர் தன்னுடைய மாமா மாமி மைத்துனி வசதியாய் வாழவேண்டும் என்ற ஆசையோடு தானே இந்த மாடிகள் கொண்ட வீட்டைக் கட்டினார். மாமா மாமியை தன் தந்தை தாய்போல் மதிக்கும் அமிர்தாவின்.. நிலானியின்.. ஏன் சுபாவின் பல நண்பிகளின் கணவன்மார்களின் மத்தியில் அகிலன் மாத்திரம் ஏன் இப்படி?? எல்லாம் சுபாவின் தலையெழுத்தா? இப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்கள் சுபா ஏங்கித்தவித்து.. குழம்பி.. பின் நாட்களில் தானாகவே தெளிந்து நிதான மானாள். எழுந்து பச்சைத்தண்ணீர் குடித்துவிட்டு வந்து தன் கட்டிலிலே சாந்தாள்.

மீண்டும் அவளுடைய போன் அடித்தது. அதே நம்பர்.

"ஹலோ..."

சுபா குரல் கொடுத்தாள். மறு முனையில் தாமதம் தெரிந்தது.

"ஹலோ ஹலோ..யாரு.."

"ஹலோ...சு..பாவா..கதைகிறீ..ங்கள்..?"

"ஓம் நீங்க..?" ஒரு ஆணின் குரல். அவளால் சட்டென்று இனம்காண முடியவில்லை.

"நான்..நான்..அகிலன் கதைக்கிறன். உங்கட நம்பரை நல்லாக் கஸ்டப்பட்டுத்தான் எடுத்தனான். போனை கட்பண்ணாம ..கொஞ்சம் கேளுங்கோ.. ஏதோ கால கஸ்டங்கள் உங்கள நான் ஏமாத்திப்போட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. சொல்லமுடியாத காரணங்கள் பல.. நான் ஊருக்கு வரப்போறன். உங்களை ஒரு தரம் பாத்து மன்னிப்புக் கேக்கவேணும்.."

சுபா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தடுமாறிப் போனாள். அகிலன் என்று தெரிந்தவுடன் அவள் வாய் திறக்கவில்லை. போனை அவள் கட்பண்ணி விடுவாளோ என்ற எண்ணத்தில் அவனும் பட படவென பேசி முடித்து விட்டான். சுபாவும் போனை கட்பண்ணி வைத்து விட்டுத் தூங்க முயற்சித்தாள். தூக்கம் வரவில்லை. அந்தக்குரல், அவளின் வாழ்வை முடித்து வைத்த குரல், இத்தனை வருடங்கள் கடந்த பின்பு அவள் வாழ்வில் மீண்டும் கேட்பாள் என்று கனவிலும் நினைக்கவில்லை. இதயம் அடித்துக்கொண்டது. அழுகை வரவில்லை. துக்கமும் இல்லை. ஏதோ ஓர் இனம்புரியாத உணர்வு நெஞ்சை பிளந்துகொண்டிருந்தது. அவள் தொலைத்த நாட்களும், நினைவுகளும் கனதியாய் கண்களை நனைத்தது.

இந்த விடயத்தை சுபா யாரிடமும் சொல்ல வில்லை. ஆனாலும் நெஞ்சுக்குள் முள் போன்று அது குத்தியது. சிலவேளை அகிலன் கூறியதுபோல் ஊருக்கு வந்து விட்டால்? ரகுராமோ.. தம்பி சேரனோ... மாலினியின் கணவர் சேரனோ சும்மா இருக்க மாட்டார்கள்.

அன்றைய இரவும், அதனைத்தொடர்ந்து வந்த நாட்களிலும் சுபா நிம்மதியாய் இருக்க வில்லை.

ஒருநாள் காலை மாலினி அவசரமாக வீட்டுக்குள் ஓடி வந்தாள்.

"அம்மா.. அம்மா..அந்த..அகிலன்.. வந்து நிக்கிறானாம்.."

"யாரு..என்ன...சொல்லுறாய்...அ"

"ஓமம்மா.. அகிலன். வெளிநாட்டால வந்து நிக்கிறானாம்.. பூரணம் மாமி சொன்னவ.. அவன்ர சிறிய தாய் வீட்டில நிக்கிறானாம். அவ அவனோடு கதைச்சவவாம். சுபாக்காவுக்கு தன்ர பேரில உள்ள காணிகளை எழுதிக் கொடுத்திட்டு அக்காட்ட மன்னிப்புக் கேட்டுட்டுப் போகப் போறானாம்.. ஆளுக்கு சரியான வருத்தங்களாம்."

என்று மாலினி மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

"பாழ்படுவான். அவன்ர சீலம்பாய்க் காணி களை ஆருக்குத் தேவை? மன்னிப்புக் கேட்டாப்போல எல்லாம் சரியாய் வந்திடுமாமோ? வரட்டும் பாப்பம்"

பார்வதி இரத்தம் கொதிக்கப் கத்தினாள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு நிதானமாய் வந்தாள் சுபா.

"ஒருத்தரும் ஆத்திரப்படவேண்டாம். மாலினி சுரேசிட்டச்சொல்லு.. இதைப்பற்றி ஒண்டும் அலட்டிக்கொள்ள வேண்டாமெண்டு... சேரனுக்கும் ஒண்டும் சொல்லவேண்டாம். முக்கியமா ராமுக்கு கம்பசில...சோதினை நடந்து கொண்டிருக்கு..இன்னும் கொஞ்ச நாளில..சோதினை முடிய வந்திடுவான். அதுக்குப்பிறகு அவனுக்கு நான் சொல்லுறன். எல்லாரும் உங்கட வேலைகளைப் போய்ப் பாருங்கோ." சுபா சொல்லிவிட்டு தன் அறையில் போயிருந்து கொண்டாள்.

இரண்டு நாட்கள் போக ரகுராம் வீட்டுக்கு வந்து விட்டான். எல்லோரும் சுபாவின் சொல்லுக்கு அடங்கி அமைதியாக இருந்தார்கள். சுபா ரகுராமை அழைத்து அமைதியாய் ஒவ்வொன்றாய் சொல்லி முடித்தாள்.

ரகுராம் சந்திவரைக்கும் தந்தையின் கடைவரை போனவன் உடனே திரும்பி வந்தான்.

"பெரியம்மா.."என அழைத்தான்.

"என்னப்பன்"

சுபா கேட்டாள்.

"பெரியம்மா..அகிலனுக்கு காட் அட்டாக் வந்து பெரியாஸ்பத்திரியிலையாம் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் Zee Tamil தொலைகாட்சி நடத்திய சரிகமப இசைப் போட்டியின் (Li'l Champs) இறுதி நிகழ்வு 17 December 2023 நடைபெற்றது. அதில் இலங்கை - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கில்மிஷா உதயசீலன் அவர்கள் வெற்றிபெற்றுள்ளார்.

கில்மிஷாவை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது



மயக்கமாய்த்தான் இருக்கிறாராம். வெளியில இருக்கிற சகோதரங்கள் வருகினமாம்."

"ஆ ....அப்பிடியா" மனதில் எழுந்த இனம் புரியாத பதட்டத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள் சுபா.

"சுபா..அகிலன்ர நிலைமை கொஞ்சம் பிழையாத்தான் இருக்கு.. உன்னைப் பாக்கத் தான் வந்தவனாம் ஏதோ யோசிச்சு செய்.." என்று பக்கத்து வீட்டு கணபதி மாமா சொன்னார். இருபத்தி ஐந்து வருடமாய் நானும் இருக்கிறன், நீதி கேட்க யாரும் வரவில்லை.. என்னுடைய சுய மரியாதையை சோதித்துப் பார்க்கிறார்களா? சீ..தனக்குள் கொந்தளித்தாள் சுபா. திடீரென ஒருமுடிவுக்கு வந்தவளாய்,

"ராம் இஞ்ச வந்திட்டுப்போ"

ராம் ஓடி வந்தான்.

"என்ன ..பெரியம்மா."

"நான் அகிலனைப் போய்ப் பாக்க வேணும். என்னோடு நீ வா.."

"ஓகே..பெரியம்மா" எந்த மறுதலிப்பும் இன்றி சம்மதித்தான் ராம்.

பார்வதியும் செல்லத்துரையும் மாலினியும் சுபாவின் இறுகிப்போன முகத்தைப் ஒருவித அச்சத்தோடு பார்த்துக்கொண்டு நின்றார்கள். சுபாவும் ரகுராமும் புறப்பட்டார்கள்.

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து ICU வாட்டை அடைந்தார்கள். அங்கே அகிலனுக்குப் பக்கத்தில் யாரும் இல்லை. அறுபது வயது அகிலன் எண்பது வயதுக் கிழவன்போல் ..ஒரு குருவியைப் போல் படுத்திருந்தான். ஐம்பத்திஐந்து வயது என்றாலும் நாற்பதுக்கு மேல் யாருமே மதிப்பிட முடியாத இளமை யுடனும் அழகுடனும் சுபா அங்கு நிற்கிறாள். ஒரு ஆணுக்குரிய கம்பீரத்தோடு நிமிர்ந்து நின்று அவளுக்குத் தாலி கட்டியது சுபாவுக்கு ஞாபகம் வந்தது. அவன் தன்னை உதாசீனம் செய்ததும் ஞாபகம் வந்தது.அகிலன் வாழமுடியாமல் நோய்க்கு விருந்தாகி இறக்கும் தருணத்தில் தன் தவறை உணர்ந்திருக்கிறான். அவனுடைய குற்ற உணர்வு சுபாவை நேரிலே சென்று பார்க்க முடியாமல் தாமதப்படுத்தி இருக்கிறது.

திடீரென பயணக்களைப்போடு அங்கு வந்த அகிலனின் சகோதரி அகிலனைப் பார்த்து சத்தம் வராமல் விம்மி விம்மி அழுதாள். அவள் அங்கு நின்ற சுபாவை அடையாளம் காண வில்லை. பின்பு ஏதோ ஞாபகம் வந்தவளாக, சுபாவைக்கட்டிக்கொண்டு விம்மினாள். சுபாவுக்கு அழுகை வரவில்லை. அவளுடைய கண்ணீர்கள் எப்போதோ வற்றிப்போய் விட்டன. அகிலனின் தங்கை ஏதேதோ சொன்னாள்.

"அண்ணா தன்ர பேரில உள்ள காணிகளை உங்களுக்கென்று எழுதித் தந்து போட்டு கொஞ்சம் பாங்கிலும் போட்டுட்டு வருவம் எண்டுதான் வந்தவர். "அவள் சாதாரணமாய்ச் சொன்னாள். சுபாவுக்கு அவள் வார்த்தைகள் நெருப்பாய்ச் சுட்டது. சுபா சட்டென்று தன் ஹான்பாக்கைத்திறந்து அதற்குள் இருந்த அந்தப் பெட்டியை எடுத்து அகிலனின் தங்கையின் கையைப் பிடித்து அழுத்திக்கொடுத்தாள். அதற்குள் சுபாவுக்கு அகிலன் போட்ட நகைகளும், தாலிக்கொடியும் இருந்தது.

"இதை அவரிட்டக் குடுங்கோ" என்று கூறி விட்டு வெளியே நடந்தாள் சுபா. வற்றிப்போன கண்களுடன் அவள் தன்னைக் கடந்து போவதைப் பார்த்தபடி கிடந்தான் அகிலன். அவனால் அசைக்கவே முடியவில்லை அவனது உடலையும், அவளது மனதையும்.

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய நண்பர்கள்

-இ. ஜீவகாருண்யன்

ஒரு காலத்தில்
எனக்கு நிறைய
நண்பர்கள்-
பலர் எழுத்தாளர்கள்
அறிவு ஜீவிகள்.

பழகுவதும்
கலந்துரையாடுவதும்
விவாதிப்பதும்
என் வாழ்வுக்கு
இருப்புக்கு
புதுப்புது தரிசனங்களைத்
தந்தன.

காலம் போகப்போக
-இறந்தவர்கள் போக
ஏனையவர்களும்
என்னை முற்றாக மறந்து போனார்கள்

இப்போது நான்
நண்பர்கள் அற்ற
தனி மரம்.
சீண்டுவார் யாரும் இல்லை.
முதுமையும், இயலாமையும்
நோய்களும்
விடாது துரத்த.

திடீரென
புன்முறுவலுடன்
நின்றார்கள்
புதிய நண்பர்கள்.

புத்தக அடுக்குகளில்
குந்தியிருந்து கொண்டு
தமிழிலும், ஆங்கிலத்திலும்
எப்போதும் என்னோட
உரையாட.

எழுத்தாள நண்பர்கள் போல
மறந்துவிட
மாட்டோம்
என,
பகையும், இல்லை
வெறுப்பும் இல்லை
அன்பும் ஆதரவும்
உற்சாகமும் தர
என

புதுமைப்பித்தன் தொடக்கம்
இன்றைய பின்நவீனத்துவ
எழுத்தாளர்கள் வரை
பகவான் புத்தர் தொடக்கம்
ஸ்ரீ அரவிந்தர் வரை

முதலும் முடிவுமற்ற
பேரிருப்பில்
இடைநிகழ்வு
இந்த வாழ்க்கை.
சந்தோசமும் துக்கமும்
வேதனைகளும்
இழப்புகளும் அழிவுகளும்
அலையலையாய்
வந்து தாக்க
எல்லையற்ற பேரிறையை
உறுதியாகப் பற்றிக் கொண்டு

எல்லா இடர்களையும் எதிர்கொண்டு
அதன் செயற்பாடுகளை
அற்புத அனுபவமாக
புரிந்துகொண்டும்
திளைப்பது
இவ்விடையிருப்பு
Episode
வாழ்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் செ. யோகராசா அவர்களின் மறைவு



பேராசிரியர் செ.யோகராசா 07-12-2023 அன்று தனது 73ஆவது வயதில் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

17.12.1949இல் வடமராட்சியின் கரணவாயில் பிறந்த செல்லையா யோகராசா தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் (தற்போது மத்திய கல்லூரி) பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் (1971) பெற்றுக் கொண்டார். அதே பல்கலைக் கழகத்தில் தத்துவமாணிப் பட்டத்தையும்(1972) பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்புளோமா(1984), முதுகலைமாணி(1990), கலாநிதி(1999) பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், சைவ பரிபாலன சபை நடத்திய சைவப்புலவர் பரீட்சையிலும் இவர் சித்தியடைந்திருந்தார்.

1972இல் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த பின்னர் தபால் அதிபராக கொழும்பிலும், மகோவிலும்(1972-76) கடமையாற்றினார்.

1976இல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று நுவரெலியா கோல்புறாக் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். தொடர்ந்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றினார். இங்கு கடமையாற்றிய வேளை மாணவர்களுக்கு ஆற்றிய சிறந்த சேவைக்காக வடமராட்சி வலையத்தால் நல்லாசிரியர் விருது (1980) இவருக்கு வழங்கப்பட்டது.

1991ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் மொழித்துறை விரிவுரையாளராகப் பணியில் இணைந்து கொண்டார். சிரேஷ்ட விரிவுரையாளராகத் தரம் உயர்ந்த இவர் 2009இல் பேராசிரியராக உயர்வு கண்டார்.

ஆரம்ப காலங்களில் கருணையோகன் என்ற புனைபெயரில் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதிய இவர் பிற்காலங்களில் விமர்சனம், ஆய்வுத் துறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

ஈழத்து இலக்கியத்தைத் திசைப்படுத்தத்தக்க ஆவணப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவை அடுத்து வரும் ஆய்வாளர்களுக்கு பெரிதும் உதவும்.

பேராசியர் செ. யோகராசா அவர்களுக்கு

ஞானம் தனது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்









## இசையுலகின் உச்சமான பேராசான் சங்கீதவித்துவான் ஏ.கே.கருணாகரன் திருவுருவச் சிலைத்திறப்பு வைபவ பதிவு

ஏ.கே.கருணாகரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும் திருவுருவச் சிலை திறப்பு வைபவமும் அவர் பிறந்தகமான கரணவாய் கிழக்கு,கரவெட்டியில் ஓய்வு நிலை ஆசிரியர் இ.கருணாகரன்அவர்கள் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக யாழ்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என் சண்முகலிங்கன் அவர்களும் திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்களும் கலந்து சிறப்பித்து திருவுருவச்சிலையை திறந்துவைத்தனர்.

●●●

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்று கூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 20-12-2023 புதன்கிழமை அன்று இடம்பெற்ற 'அறிவோர் ஒன்று கூடல்-840 நிகழ்ச்சி மூத்த ஊடக கலைஞர் திருமதி சுமதி பாலஶ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலைஞானச்சுடர் ஶ்ரீசுபாஷினி பிரணவன் தயாரித்து வழங்கிய பக்திப்பாடல், சிறுவர்பாடல், நாட்டார்பாடல், அடங்கிய கதை சொல்லும் கலை வடிவங்கள் அளிக்கை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சி முடிவில் கலந்துரையாடலின்போது சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ. இரகுபதி பாலஶ்ரீதரன் பின்வரும் நாட்டார்பாடலை கூறி சபையோரை மகிழ்வித்தார்

**"அக்கா வீட்டைபோனேன்**
**அறுகரிசி தந்தார்**
**வேண்டாமென்று வந்தேன்**
**வழிநெடுக பாம்பு**
**பாம்பு அடிக்கத் தடிக்குப்போனேன்**
**தடியெல்லாம் ஊத்தை**
**ஊத்தை கழுவத் தண்ணிக்குப்போனேன்.**
**தண்ணி எல்லாம் மீன்**
**மீன் பிடிக்க வலைக்குப் போனேன்.**
**வலை எல்லாம் ஓட்டை**
**ஓட்டை தைக்க ஊசிக்குப் போனேன்.**
**ஊசிக்காரன் செத்துப் போனான்!"**

**– இணுவை இரகு**

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

டிசம்பர் மாத ஞானம் இதழில் வெளியான ஆசி கந்தராஜா அவர்களின் "பலஸ்தீனியன் வீட்டுப் பூனைகள்" அருமையான குறியீட்டுக் கதை .

வரலாற்று அறிவியல் என்னும் ஒட்டுக் கட்டையில் கச்சிதமாக ஒட்டப்பட்ட விஞ்ஞான அறிவியல் கதையாகவும் கொள்ளலாம்.

சில ஆயிரம் வருடங்களுக்கு முன்னிருந்து தொடரும் வரலாற்றுப் பகையையும் அண்மைய சம்பவங்களையும் மனதில் கொண்டு இக்கதை புனையப்பட்டுள்ளது. "பூனைகளுக்கு மலம் கழிக்க இடமில்லாமல் போனதற்கான" காரணம் பலவாறாக நியாயப்படுத்தப்படக் கூடியது. தாம் சுதந்திரமாக இயங்கக் கூடியதோர் நிலத்தை சட்டபூர்வமாக 1948 இல் ஏற்றுக் கொள்ளாமல் அல்லது வலியுறுத்தாமல் விட்டதால் இன்று நெருக்கடிக்கு உள்ளாகி நிற்கும் நிலையில் பலஸ்தீனம். ஏற்றுக் கொண்டதால் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இஸ்ரேலியர்கள்.

"இடையில் யூதர்கள் அப்பிரதேசத்தை நீங்கியதும் தற்போது உரிமை கோருவதும் தவறு" என்று பாலஸ்தீனியரான போலஸ் என்னும் கதாபாத்திரம் கூறுவதை நியாயம் என்று எடுத்துக்கொண்டால், தமக்கெல்லாம் மூதாதையான ஆபிரகாமுக்கு இறைவனால் வழங்கப்பட்ட வார்த்தைகளை மீறுவது ஆகாதா ? அந்த வார்த்தைகளின் மேல் கட்டமைக்கப்பட்ட மதநம்பிக்கைகள் என்னாவது என்றோர் கேள்வி எழுகிறது.

"அடடே, இது நம்மநாட்டுக் கதைமாதிரி இருக்கே...."

உண்மைதான்

பல சந்தர்ப்பங்களில்.

உரிமைகள் சிறிதேனும் கொடுக்கப்படும் போது மறுப்பதும், பின் அதற்காகப் போராடுவதுமான வாழ்க்கைதான் இலங்கைத் தமிழருடையது. இன்று இலங்கையில் இருந்து பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்தவர்களுக்கும், போலஸ் எனும் பலஸ்தீனியரின் கூற்று பொருந்தக் கூடும். அன்று யூதர்கள் இடம்பெயர்ந்தது பஞ்சம், பொருளாதார நலன், யூத இன அழிப்பு சார்ந்தது. இலங்கைத் தமிழர்களுக்கும் இதையொத்த காரணங்கள் உண்டு.

எப்படியோ சிந்தனைக்கு விருந்தாகும் நல்லதோர் படைப்பு.

**ரஞ்ஜனி சுப்ரமணியம்**

•••

ஞானம் கலை இலக்கிய மார்கழி மாதச் சஞ்சிகையில் வெளிவந்த பரிசுபெற்ற குப்பை எனும் சிறுகதையானது சமுதாயத்தில் நிகழும் சீரழிவுகளைச் சித்தரிக்கின்றது. எழுத்தாளர் திரு மகேஷ் அவர்களின் எழுதுகோல் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கியுள்ளது. இந்தச் சமுதாயத்தில் என்ன நடக்கிறது? நாம் எப்படியெல்லாம் செயற்படுகின்றோம்? என்ற விழிப்புணர்வு இல்லாமல் சுயநலமாகச் செயற்படும் சின்னத்தம்பி போன்றவர்கள்தான் இந்தச் சமுதாயத்தின் குப்பை வண்டிகள். குறைகளைக் கண்டால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை என்பதற்கு இந்தச் சிறுகதை நல்ல உதாரணம்.

மலையகம் 200 மகிழ்ச்சியா? சோகமா கலாபூஷணம் ஆ. இரகுபதி பாலசிறீதரன் அவர்கள் மலையகத் தமிழர்களின் துன்பம் தோய்ந்த வரலாற்றைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். அலைக்கடலின் நடுவே துடுப்பின்றிப் பயணிக்கும் மரக்கலம் போன்றவர்கள்தான் மலையகத் தமிழர்கள் என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

**ராதா சிவப்பிரகாசம்**

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செண்டு என்பது அங்குசம் போன்று வளைந்த அமைப்பிலுள்ள ஒர் ஆயுதமாகும். இந்துசமய வழிபாட்டில் ஐயனார் தெய்வத்தின் கரத்திலே இந்த ஆயுதத்தைக் காணலாம். மேலும் சில சிவன் மற்றும் நந்தி உருவங்களின் சிலைகளிலும் காணலாம். செண்டு ஆயுதத்துக்கும் பாண்டியர்களுக்கும் பண்டைய காலம்தொட்டு தொடர்புள்ளதை புராண இலக்கியங்களில் கண்டு கொள்ளலாம். திருவிளையாடல் புராணத்திலே உக்கிர பாண்டியன், செண்டு ஆயுதம் கொண்டு மேரு மலையை அடித்து அங்கிருந்து செல்வம் பெற்றுவந்தான் என்கிற குறிப்பு உள்ளது.

இவ்விடத்திலே உ.வே.சாமிநாத ஐயரை செண்டு படுத்தியபாட்டை ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். இதுபற்றி அவர் தமது 'செண்டலங்காரர்' என்னும் கட்டுரையிலே விரிவாக குறிப்பிட்டுள்ளார். வில்லிபுத்தூராரின் மகாபாரதத்திலே துச்சாதனன் திரௌபதியை வலியப் பிடித்து இழுத்துவரும் காட்சியைப் பாடும்போது,

தண்டார் விடலை தாயுரைப்பத் தாய்முன்னணுகித் தாமரைக் கைச்
செண்டால் அவள் பைங்குழல் பற்றித் தீண்டானாகிச் செல்கின்றான்

எனப் பாடுகிறார், இதிலே 'கைச் செண்டால் அவள் பைங்குழல் பற்றி' என வருகின்ற தொடரானது உ.வே.சா.வுக்குப் பல ஆண்டுகளாகப் புரியவில்லை.பல உரையாசிரியர்கள் இவ்விடத்திலே 'செண்டு' என்பதற்குப் 'பூச்செண்டு' என்று உரைசெய்துள்ளமை ஐயருக்குத் திருப்தி அளிக்கவில்லை. துச்சாதனின் கரத்திலே பூச்செண்டு ஏது? என அவரின் மனம் வினா எழுப்பியவண்ணம் இருந்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் 'ஆறுபாதி' என்னும் ஊரிலேயுள்ள, திருமால் கோயிலொன்றிலே 'செண்டலங்காரப் பெருமாள்' விக்கிரகத்திலே வளைந்த அமைப்பிலமைந்த 'செண்டு' ஆயுதத்தைக் கண்டுள்ளார். அத்தருணம் அவரின் மனதிலே தலைப்பு வளைந்த பிரம்பு போன்ற ஒரு கருவியால் திரௌபதியின் கூந்தலை துச்சாதனன் பற்றி இழுக்கும் காட்சி எழும்பி வில்லிபுத்தூராரின் வரிகளுக்குத் தமக்கு தெளிவு கிடைத்ததாகக் கூறுகின்றார்.

பண்டைய காலம்தொட்டு மீன்களுடன் சேர்த்து செண்டையும் பாண்டியர்கள் தமது அடையாளமாகக் கொண்டுள்ளனர்.



ஆதிநாராயண பெருமாள் கோயில் - மதுரை



ஸ்ரீரங்கம் பெருமாள் கோயில் - திருச்சி



சிதம்பரம் சிவன் கோயில் - சிதம்பரம்



சங்கர நாராயணர் கோயில் - திருநெல்வேலி

இங்கு காட்டப்பெற்ற கோயில் சிற்ப படங்கள் நான்கும் இணையத்திலிருந்து பெற்று உள்ளடக்கப்பெற்றவை - நன்றி

## (38) பிற்கால பாண்டிய நாணயங்கள்

சோழர்களைப்போல பாண்டியர்களும் இலங்கையிலே ஆட்சி செலுத்தியுள்ளார்கள். சங்ககால, இடைக்கால, பிற்கால பாண்டிய நாணயங்கள் இலங்கையிலே கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த நாணயங்களுக்குரிய காலங்களையும் உரிய மன்னர்களையும் துணிவதில் ஆய்வாளர்கள் மாறுபடுவர்.



இங்கு ஆசிரியரின் சேகரிப்பிலுள்ள இரு பாண்டிய நாணயங்கள் காட்டப்பட்டுள்ளன. சற்று உடைந்துள்ள இரு நாணயங்களிலும் மனித உருவத்துக்கு அருகிலே நிலைக்குத்தாகவுள்ள ஒரு மீனையும் அதனருகிலே வளைந்த செண்டையும் காணலாம். மற்றைய புறத்திலே நிற்கும் மனிதனின் உருவம் உள்ளது. இந்த நாணயங்களை கி.பி 9 - 11ஆம் நூற்றாண்டுகளுக்குரியனவாக இலங்கை மற்றும் இந்திய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். சிலர் இவற்றை முதலாம் சுந்தர பாண்டியனின் நாணயங்களாகத் துணிந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/29/2024



## (39) சுந்தர பாண்டியன் நாணயங்கள்

1200களில் நான்கு பாண்டிய மன்னர்கள் 'சுந்தர பாண்டியன்' என்னும் பெயர் கொண்டு ஆட்சிசெய்துள்ளனர். இவர்களிலே சடைவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் இலங்கையின் பகுதிகளையும் ஆட்சிசெய்துள்ளான் என்பதை அறிய முடிகிறது. சுந்தரபாண்டியன் என்பதை 'சுநதரபாண' மற்றும் 'சுதரபாண' என்ற தமிழ் எழுத்துக்களில் பொறித்த நாணயங்கள் பல வகைகளிலே கிடைக்கப்பெறுகின்றன. இவற்றிலே மீன்களையும் செண்டையும் காணமுடியும். சில நாணயங்களிலே பிறைச் சந்திரனும் உள்ளது.



இடதுபுறமுள்ள நாணயத்திலே 'சுத' என்னும் எழுத்துக்களைக் காணலாம். நடுவில் உள்ள நாணயத்திலே 'சுதர' என்பதற்கு மேலே பிறைச் சந்திரன் உள்ளது. வலதுபுறத்திலுள்ள பெரிய நாணயத்திலே 'சுந' என்பது முதலாம் வரியிலும் 'தர' என்பது இரண்டாம் வரியிலும் உள்ளன. பெயருக்கு அருகிலே மனித உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நாணயங்களில் ஏனைய எழுத்துக்கள் தேய்வடைந்துள்ளன.

இரண்டு மீன்கள் நிலைக்குத்தாகவுள்ளன. அவற்றுக்கு நடுவிலே செண்டு உள்ளது. இவற்றுக்கு மேலே பிறைச் சந்திரன் உள்ளது.





இந்த நாணயத்தின் ஒரு புறத்திலே நிற்கும் மனித உருவத்துக்கு வலதுபுறத்திலே பிறையைக் காணமுடியும். மற்றைய புறத்திலே இருமீன்களும் இடையிலே செண்டும் உள்ளன.

18-9-2020 அன்று இலங்கை மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் என்னும் இடத்திலே வீடுகட்ட குழிகள் தோண்டும்போது 1904 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இலங்கையின் வடபகுதியிலே கண்டெடுக்கப்பட்ட நாணயங்களிலே இத்தகைய பெரிய தொகையான நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டமை இதுதான் முதல் தடவை என்ற கருத்து உள்ளது. இதிலே குறிப்பிடப்படவேண்டிய விடயம் யாதெனில் இந்நாணயங்கள் யாவற்றிலும் மீன்சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன என்னும் செய்தி வெளியிடப்பட்டது. இதே வகையான நாணயங்கள் முன்னரும் இலங்கையிலே கிடைத்துள்ளன. இந்த நாணயங்கள் கிடைக்கப்பெற்ற காலத்திலே இவை பாண்டியருக்குரியவை என்ற செய்திகள் பரவலாக வெளியாகின. ஆனால் சில சிங்கள ஊடகங்களிலே இவை அனுராதபுர காலத்துக்குரியவை என்றும் செய்திகள் வெளியாயின!! இலங்கையிலே, நாணயங்கள் சார்ந்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் அவர்களுக்கு இன்றுவரை (2024 ஜனவரி) கிடைக்கப்பெற்ற இந்நாணயங்களை ஆய்வு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறவில்லை என்னும் நிலை கவலைக்குரியது.



மன்னாரில் கிடைக்கப்பட்ட நாணயக்குவியல் - 2020 செப்டெம்பர்

தொடரும்

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org